# உதயன்

சுடர் : 36 கதிர் : 203 | வியாழக்கிழமை | ஆனி 03 ஆம் நாள் 17 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## 2,419 பேருக்கு தொற்று

கொழும்பு, ஜூன் 17

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 419 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு 15 ►

## பெற்றோல் மூலமாக அரசுக்கு 49 ரூபா லாபம்

கொழும்பு, ஜூன் 17

"உலக சந்தையில் எரிபொருளின் விலையை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், கப்பல் மூலம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் ஒரு லீற்றர் பெற்றோலின் 15 ►

சுகாதார நியதிச் சட்டத்துக்கு அமைவாக

## வடக்கு மருத்துவமனைகளை மத்திக்கு வழங்க முடியாது

*வடக்கு அவைத் தலைவர் ஆளுநருக்கு கடிதம்*

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடக்கு மாகாணசபை நிறைவேற்றிய சுகாதார நியதிச் சட்டத்துக்கு அமைவாக, மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட மருத்துவமனைகளை மத்திய அரசிடம் கையளிக்க முடியாது என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். இந்த விடயத்தையும் சுட்டிக்காட்டி வடக்கு மாகாண 15 ►

## யாழில் 122 வடக்கில் 147

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடக்கில் 147 பேருக்குத் நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பி.சி.ஆர். பரிசோதனை ஊடாக 96 பேருக்கும், அன்டிஜென் சோதனை ஊடாக 51 பேருக்கும் தொற்று உறுதிப்படுத் 15 ►

# கூட்டமைப்பை நம்பவைத்து கழுத்தறுத்துள்ளார் கோத்தா

## இப்படிச்சொல்கிறது சஜித் தரப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

கடந்த காலத்தில் பல தடவைகள் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைத்து ஏமாற்றியவர்கள்தான் ராஜபக்சக்கள். இப்போது பேச்சு என்று அறிவித்துவிட்டு அதனை நடத்தாமலேயே ஒத்திவைத்துள்ளனர். 15 ►


## மாடியிலிருந்து வீழ்ந்தவர் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 17

கட்டடப் பணியின்போது, முதலாம் மாடியிலிருந்து வீழ்ந்த நபர், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. 15 ►

## கூட்டமைப்புடன் பேசவேண்டாமென எந்தவோர் அழுத்தமும் வரவில்லை!

அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான ஜனாதிபதி கோத்தாபயவின் சந்திப்பு எந்தவோர் அழுத்தங்களாலும் ஒழுங்கு படுத்தப்படவில்லை. அதேபோன்று எந்தவோர் அழுத்தங்களாலும் ஒத்திவைக்கப்படவில்லை. 15 ►

## இந்தோனேசியாவில் 6.1 ரிச்டர் நிலநடுக்கம்

கொழும்பு, ஜூன் 17

இந்தோனேசியாவின் வடக்கு மாலுகு தீவுகள் பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் நேற்று ஏற்பட்டது. அதனைத் 15 ►

## குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 17

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட புதுஐயங்கன் குளத்தில் நீராடச் சென்ற மூன்று பிள்ளைகளின் தந்தை நேற்று சடலமாக மீட் 15 ►

## கூட்டமைப்பு - இந்தியத்தூதர் கொழும்பில் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும், இந்தியத் தூதுவருக்கும் இடையில் இன்றைய தினம் சந்திப்பு நடைபெறும் என்று தெரியவருகின்றது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற 13 ►

## கண்டியில் நிலஅதிர்வு

கொழும்பு, ஜூன் 17

கண்டி மாவட்டத்திலுள்ள விக்டோரியா நீர்த்தேக்கத்துக்கு அருகில் 1.82 மெக்னிடியூட் அளவில் நில அதிர்வொன்று 15 ►

## தனிமைப்படுத்தப்பட்டவர் கிணற்றில் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூன் 17

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த ஒருவர், கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் வவுனியா கற்குழி பகுதியில் 15 ►

## பால்மா விலையும் அதிகரிக்கலாம்!

(விரிவு 02 ஆம் பக்கம்)

## பி.சி.ஆர். பரிசோதனைகளில் 5 பேரில் ஒருவருக்குத் தொற்று

*மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூன் 17

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். சோதனைகளில் 5 தொடக்கம் 10 பேருக்கு ஒரு தொற்றாளர் அடையாளம் காணப்படும் 13 ►


உதயன்

செய்திகளுக்கு 021 493 0000 077 1209994

விளம்பரங்களுக்கு 021 493 1111 071 6182182


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




## மாஸ்க்கு மாற்றீடல்ல பே:.ஸ் சீல்ட்

சுகாதாரப் பணியகம் தெரிவிப்பு

கொழும்பு. ஜூன் 17

முகக் கவசத்துக்கு (மாஸ்க்) மாற்றீடாக ஒருபோதும் பேஃஸ் சீல்ட் (Face shield) பயன்படுத்தக் கூடாது என்று இலங்கை சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

சுகாதாரப் பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், முகக்கவசம் அணிவதன் ஊடாக கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவரிடமிருந்து இன்னொருவருக்கு காற்று வழியாக அதன் பரவுகையைக் குறைக்க முடியும்.

பேஃஸ் சீல்ட் அணிவதன் மூலம், நெருக்கமான ஒருவரின் வாயிலிருந்து கிருமிகளை நேரடியாக முகத்தில் துப்புவதைத் தடுக்க முடியும்.

சமூக இடைவெளியைப் பேணுவது கடினமான சூழலில், முகக் கவசத்துக்கு மேலதிகமாக பேஃஸ் சீல்ட் அணிவதன் மூலம் எச்சில் மற்றொருவரில் படுவதைத் தவிர்க்க முடியும். முகக்கவசம் அழுக்கடையாமல் இருப்பதற்கு பேஃஸ் சீல்ட் அணிவதற்குப் பரிந்துரைக்கலாம். ஆனால் முகக்கவசம் இல்லாமல் தனித்து பேஃஸ் சீல்ட் பயன்படுத்துவது ஆரோக்கியமானது அல்ல, என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ.5.இ)

# பால்மா விலையும் அதிகரிக்கப்படலாம்!

**கொழும்பு, ஜூன் 17**

**பால்மா இறக்குமதியாளர்கள், அதன் விலையை 37 சதவீதத்தால் அதிகரிக்க அனுமதிக்குமாறு அரசிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர். இரண்டு ஆண்டுகளாக இந்தக் கோரிக்கை முன்வைத்தாலும், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அனுமதிக்கவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். எரிபொருள் விலை அதிகரிப்புக்கும் இதற்கும் தொடர்பு இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கையின் மொத்த பால் தேவையின் 65 சதவீதம் இறக்குமதி செய்யப்படும் பால்மாவால் ஈடு செய்யப்படுகின்றது. இந்த நிலையில், கடந்த ஜனவரி மாதத்திலிருந்து உலகளாவிய ரீதியில் பால் மற்றும் பால்மாவின் விலை உயர்ந்து செல்கின்றது. சீனாவின் அதிகரித்த கொள்ளவு காரணமாக உலக சந்தையில் போட்டி அதிகரித்துள்ளது. இலங்கையில் பால்மா இறக்குமதி செய்வதால் கடந்த ஜூலை மாதத்திலிருந்து மாதாந்தம் 2 பில்லியன் இழப்பைச் சந்தித்து வருகின்றோம்.

தற்போதைய நிலையில் ஒரு கிலோ பால்மாவின் விலையை ஆகக் குறைந்தது 350 ரூபாவால் அதிகரிக்கவேண்டும். தற்போது சந்தையில் ஒரு கிலோ பால்மாவின் விலை 945 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அதனை ஆயிரத்து 295 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு அனுமதியை எதிர்பார்த்துள்ளோம். கடந்த மார்ச் மாதம் முதல் பால்மாவை இந்த விலையில் விற்பனை செய்வதற்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்து வருகின்றோம். ஆனால் விலை அதிகரிப்புக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை. இந்த நிலையில் சில இறக்குமதியாளர்கள் கடந்த மே மாதத்திலிருந்து 30 தொடக்கம் 40 வீதம் வரையில் தமது இறக்குமதிகளைக் குறைத்துள்ளனர், என்று குறிப்பிட்டுள்ளனர். (ஒ.5.இ)



## மேலும் 59 பேர் தொற்றால் சாவு!

கொழும்பு, ஜூன் 17

நாட்டில் மேலும் 59 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 28 பெண்களும், 31 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதற்கமைய, நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 374 ஆக அதிகரித்துள்ளது. (த22)

## ஷானி அபயசேகர 11 மாதங்களின் பின்னர் பிணையில் விடுவிப்பு!!!

கொழும்பு, ஜூன் 17

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபயசேகர 11 மாதங்களின் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மூத்த சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவால், ஷானி அபயசேகர சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மீளாய்வு மனு மீதான விசாரணையில் மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதியரசர்களான பந்துல கருணாரத்ன, குருசிங்க ஆகியோர் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

ஷானி அபயசேகர சார்பில் மூத்த சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவின் ஆலோசனைக்கு அமைவாக மூத்த சட்டத்தரணி விரான் கொரேரா வாதங்களை முன்வைத்தார். ஷானி அபயசேகர நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி மாரடைப்பு ஏற்பட்டு தற்போது சிறைச்சாலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். பிணைச் சட்டத்தின் கீழ் இவருக்கு பிணை வழங்கப்பட வேண்டும். அத்துடன் ஷானி அபயசேகர, உலகின் தலை சிறந்த புலனாய்வு அதிகாரி என்ற சர்வதேச விருதைப் பெற்றவர்.

மேலும் சர்வதேச கவனத்தை ஈர்த்த, கொழும்பில் 5 மாணவர்கள் உள்பட 11 இளைஞர்கள் கடத்தல் சம்பவத்தில் கடற்படைத் தளபதி வசந்த கருணாகொட மற்றும் 13 கடற்படையினருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு, ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட கடத்தல் வழக்கு, ரோயல் பார்க் கொலை வழக்கு, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கொலை முயற்சி வழக்கு உள்ளிட்டவற்றில் மூத்த புலனாய்வு அதிகாரியாகச் செயற்பட்டவர் என்பதையும் மன்றின் கவனத்துக்கு சட்டத்தரணி விரான் கொண்டு வந்தார். கொரோனாத் தொற்று வேகமாகப் பரவும் இந்த நிலையில் சிறையில் அவரைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பது சட்ட ரீதியற்ற செயற்பாடு என்று சட்டத்தரணி விரான் வாதிட்டதுடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தீர்ப்புக்கள் பலவற்றையும் கோடிட்டுக்காட்டினார்.

வழக்கில் சட்டமாஅதிபர் சார்பில் முன்னிலையான பிரதி மன்றாடியார் நாயகம் ரோகந்த அபயசூரிய, விசாரணைகள் இன்னமும் முழுமையாக நிறைவடையாமையால் பிணை வழங்குவதற்கு கடும் ஆட்சேபனை வெளியிட்டார்.

மனுதாரர் சட்டத்தரணி விரான், அவருக்கு எதிராக உள்ள சாட்சிகளில் தலையீடு செய்வார் அல்லது நீதிமன்ற, விளக்கத்துக்கு சமூகமளிக்கமாட்டார் என தகுந்த காரணங்கள் அரச தரப்பால் முன்வைக்கப் படாத காரணத்தால் பிணை வழங்கப்பட வேண்டும் என்று கோரினார். சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடும் ஆட்சேபனைக்கு மத்தியிலும், ஷானி அபயசேகரவுக்கு நீதியரசர்கள் பிணை வழங்கினர். 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 10 லட்சம் ரூபா ஆள் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார். அத்துடன் பயணக் கட்டுப்பாடும் விதிக்கப்பட்டது.

நல்லாட்சி அரசின் காலத்தில், மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் கிடப்பில்போடப்பட்ட பல வழக்குகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் முன்னின்று செயற்பட்டவர் ஷானி அபயசேகர. அவர் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதி கைது செய்யப்பட்டார். பிரபல வர்த்தகர் மொகமட் ஷியாம் கொலை வழக்கில், சந்தேகநபர்களுக்கு எதிரான சாட்சியங்களை உருவாக்கினார் என்ற குற்றச்சாட்டில் இவர் கைதுசெய்யப்பட்டு கம்பஹா நீதிவான் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அங்கு பிணை மறுக்கப்பட்டமையால் கம்பஹா மேல் நீதிமன்றில் பிணை கோரிக்கையை முன்வைத்தார். அங்கு மறுக்கப்பட்ட நிலையிலேயே அவர் மேன்முறையீடு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)



## சுழிபுரத்தில் மோட்டார் 'ஷெல்'

யாழ்ப்பாணம், ஜூன் 17

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுழிபுரம் வறுத்தோலை பகுதியில், மோட்டார் ஷெல் ஒன்று நேற்றுக் கண்டறியப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றில் ஜே.சி.பி. இயந்திரம் மூலமாக துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட்டது. அதன்போதே குறித்த ஷெல் அவதானிக்கப்பட்டது. இது குறித்து காணியின் உரிமையாளர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

நீதிமன்ற அனுமதிபெற்று குறித்த வெடிகுண்டு அகற்றப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணக் கட்டுப்பாடுகளால் இழப்பு ரூ.45,000 கோடி

கொழும்பு, ஜுன் 17

**நாட்டில் நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக, சுமார் 45 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், நாளாந்தம் ஆயிரத்து 500 கோடி ரூபாவுக்கும் மேலதிகமாக நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதே வேளை, கொரோனாத் தடுப்பூசிகள், மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவ உபகரணங்களைக் கொண்டு வர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டில் பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது- என்றார். (ம-4)



இலங்கைக்கான

## அமெரிக்கத் தூதுவராக ஜுலி ஜியூன் பரிந்துரை

கொழும்பு, ஜுன் 17

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக ஜுலி ஜியூன் சங்கின் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனால், இவருடைய பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு மேலதிகமாக மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவராகவும் இவர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இவர் கம்போடியா, தாய்லாந்து, ஈராக், கொலம்பியா, வியட்நாம், ஜப்பான் மற்றும் சீனாவுக்கான அமெரிக்க தூதுவராலயங்களில் பல்வேறு பொறுப்புக்களில் கடமையாற்றியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

பங்களாதேஷை தொடர்ந்து

## இந்தியாவிடமும் கை ஏந்தும் இலங்கை

கொழும்பு, ஜுன் 17

இந்தியாவிடமிருந்து 400 மில்லியன் அமெரிக்க டொலரை, இலங்கை கடனாகக் கோரியுள்ளது. இதனை நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல உறுதிப்படுத்தியுள்ளார். இரு நாட்டு மத்திய வங்கிகளும், இது சார்ந்த பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன. நாணய மாற்று கைமாறல் வித்தில் கடனைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை பங்களாதேஷிடமிருந்தும் இலங்கை ஒரு தொகை கடனைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## சமையல் எரிவாயுவின் விலையும் அதிகரிக்கும்

இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 17

எரிபொருள்களின் விலையை அதிகரிக்கப்பட்டதைப் போன்று சமையல் எரிவாயுவின் விலையும் அதிகரிக்கப்படும்.



ஆனால் அது எப்போது நடக்கும் என்பது தெரியாது. இவ்வாறு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் சிரமத்தில் உள்ளனர் என்பது நன்றாகத் தெரியும். மக்களின் கஷ்டங்களும் எமக்குப் புரியும். இவ்வாறான சூழ்நிலையில் சிரமமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய கட்டாயம் எமக்கு உள்ளது எரிபொருள்களின் விலையை அதிகரிக்காவிட்டால் எதிர்காலத்தில் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும்.

கடந்த அரசில் காணப்பட்ட எரிபொருள் விலைச்சூத்திரம் தற்போதும் இருந்திருந்தால், எரிபொருள்களின் விலை இன்னும் அதிகரித்திருக்கும்.

எரிபொருள்களின் விலை அதிகரிப்புடன், சமையல் எரிவாயுவின் விலையும் அதிகரிக்கப்படும்.

அதிக விலைக்கு எரிவாயுவைக் கொள்வனவு செய்து, குறைந்த விலைக்கு விற்பனை செய்ய முடியாது. எனவே, சமையல் எரிவாயுவின் விலையும் அதிகரிக்கப்படும்- என்றார். (ம-4)

## மதுவென அமிலத்தை அருந்தியவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜுன் 17

பற்றரி அமிலத்தை மது என்று நினைத்து போதையில் பருகியவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் காலி பட்டுவ பிரதேசத்தில் நடந்துள்ளது. குறித்த நபர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகன திருத்துமிடத்துக்கு, லொறியொன்றின் பற்றரி அமிலத்தை மாற்றுவதற்கு வருகை தந்த மூவருடன் சேர்ந்து இவரும் மதுபானம் அருந்தியுள்ளார். இதன்போது தவறுதலாக பற்றரி அமிலத்தை பருகியுள்ளார்.

லொறியுடன் வாகன திருத்துமிடத்துக்கு வருகை தந்த நபர்களிடம் சட்டவிரோத மதுபான போத்தல் ஒன்றும், 2 போத்தல்களில் அமிலமும் மீட்கப்பட்டன. உயிரிழந்தவர் மதுபோதையில் அமிலத்தைப் பருகியுள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-4)



## எரிபொருள் விலை அதிகரிப்பு நிவாரணம் வழங்குங்கள்

*கர்தினாலும் கோரிக்கை*

கொழும்பு, ஜுன் 17

அண்மையில் அதிகரித்த எரிபொருள் விலைகள் குறித்து நிவாரணம் வழங்குமாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பேர்ள் கப்பல் விபத்தால் மேல் மாகாணத்தில் மீனவர்கள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கொரோனாத் தொற்றாலும் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளனர். இந்த நிலையில் எரிபொருள் விலை அதிகரிப்பால் அவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும், என்று கோரியுள்ளார். (ஓ.5.இ)

## இறக்குமதிப் பொருள்களின் விலைகளும் கிடுகிடுவென உயரும்

*கொள்கலன் விநியோகக் கட்டணம் அதிகரிப்பதால் இந்த நிலைமை*

கொழும்பு, ஜுன் 17


கொள்கலனுக்கான போக்குவரத்துக் கட்டணம் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் 15 வீதத்தால் அதிகரிக்கப்படும் என்று அகில இலங்கை ஒன்றிணைந்த கொள்கலன் போக்குவரத்து வாகனங்களின் உரிமையாளங்களின் சங்கம் தெரிவித்துள் ளது.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பு மற்றும் வாகனங்களின் உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்பு ஆகியவற்றால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் இணைத்தலைவர் சனத் மஞ்சுள தெரிவித்துள்ளார்.

இந்த சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள நிலையில், இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களான பருப்பு, பால்மா, தேங்காய் எண்ணெய் மற்றும் சீனி ஆகியவற்றின் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது. (ம-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கைக்குள் டெல்டா திரிபு வைரஸை நுழையவிட்டால் ஆபத்து

### மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 17
இந்தியா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பரவிவரும் டெல்டா திரிபு வைரஸ் மிகவும் ஆபத்தானது.
இதனை இலங்கைக்குள் பரவவிடாமல் தடுப்பதற்கு விமான நிலையம், துறைமுகம் போன்ற இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்று இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பயணக் கட்டுப்பாடு அமுலாக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் மக்களின் நடத்தையை அவதானிக்கையில், அதன் சாதகமான பெறுபேற்றை பெறமுடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.
தேர்தல் காலப்பகுதிகளில், நடமாட முடியாத வயோதிபர்கள் மற்றும் நோயாளர்களை கதிரைகளில் இருத்தி, வாக்களிப்பு நிலையங்களுக்கு தூக்கிச் சென்றதைப் போன்று, தடுப்பூசி பெற்றுக்கொள்வதற்கும் அக்கறைகாட்ட வேண்டும்.
இந்தத் தொற்றானது சுகாதாரப் பிரிவினரால் மாத்திரம் கட்டுப்படுத்தக்கூடியதொன்றல்ல. அதற்கு மக்களின் பங்களிப்பும் மிகவும் அவசியம். குறிப்பாக கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள், தமிழக மீனவர்களைத் தொடர்பு கொள்ளாதிருப்பதன் மூலம் இந்த வைரஸ் திரிபு நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க முடியும்- என்றார். (ம-4)

# உருமாறியது டெல்டா வைரஸ்

### விஞ்ஞானிகள் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 17**
**அதிகமாக பரவும் தன்மையுள்ள டெல்டா வகை சார்ந்த கொரோனா வைரஸ் மேலும் உருமாறி, 'டெல்டா பிளஸ்' ஆக மாறியுள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் மிக மோசமான இரண்டாவது அலைக்கு முக்கிய காரணமான டெல்டா வகை கொரோனா வைரஸ், மேலும் உருமாறி புதிய டெல்டா பிளஸ் வகையாக மாறியுள்ளது.
எனினும் இந்தியாவில் இந்த வைரஸின் பாதிப்பு தற்போது குறைவடைந்துள்ளது. இந்த வைரஸால் அதிகம் கவலைப்பட தேவையில்லை என்றாலும், அதைத் தொடர்ந்து கண்காணித்து வருவது அவசியம் என்றனர். இந்த நிலையில் இலங்கையிலும் இந்த வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பான ஆய்வுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## மக்கள் அடங்க மறுத்தால் பயணத்தடை தொடரும்!

கொழும்பு, ஜூன் 17
'பயணக்கட்டுப்பாடுகளை மக்கள் மீறும்நிலை நீடித்தால் பயணத்தடையையும் நீடிக்க வேண்டிய நிலை ஏற்படும்' என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் நேற்று தெரிவித்தார்.
'தனிமைப்படுத்தல் சட்டத்தையும், பயணக்கட்டுப்பாட்டு நடைமுறைகளையும் உரியவகையில் பின்பற்றுமாறு நாட்டு மக்களிடம் மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம். எனினும், சட்டதிட்டங்களை மீறிச்செயற்படும் சம்பவங்கள் நாளாந்தம் அதிகரித்துவருகின்றன.
எனவே, பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டாலும் மக்கள் உரியவகையில் செயற்படுவார்களா என்ற அச்சநிலை உருவாகியுள்ளது. நடைமுறைகளை மக்கள் தொடர்ச்சியாக மீறினால் பயணக் கட்டுப்பாட்டை மேலும் ஒரு அல்லது இரு வாரங்களுக்கு பயணத் தடையை நீடிக்கவேண்டும் என்ற பரிந்துரை முன்வைக்கப்படும். இதைவிட வேறுவழியில்லை.' என்றும் அவர் கூறினார். (ம-44)

# போக்குவரத்துக் கட்டுப்பாட்டை நீக்குவது மக்களின் கைகளில்

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17
போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் மற்றும் சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றினால் மட்டுமே கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையும். அதன் மூலம் எதிர்வரும் திங்கட்கிழமை போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை நீக்கக்கூடிய சூழல் உருவாகும் இவ்வாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
எதிர்வரும் 21ஆம் திகதி போக்குவரத்துத் தடைகளை நீக்குவது என்றே தீர்மானித்துள்ளோம். போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் உட்பட அனைத்து விதிமுறைகளையும் மக்கள் இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும்.
கடந்த சில நாள்களாக அதிகளவு வாகனங்களை வீதிகளில் அவதானிக்க முடிகின்றது. தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறியமைக்காக நேற்றும் ஆயிரத்து 411 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரே நாளில்



அதிகளவானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த நிலைமை நீடித்தால் கட்டுப்பாடுகளை தளர்த்த முடியாது. அனைத்தும் மக்கள் நடந்து கொள்வதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்- என்றார். (ம-4)

# மாகாணங்களின் அதிகாரத்தை மத்திக்கு தாரைவார்த்தமைக்கு தமிழ் மக்களே காரணமாம்

### அமைச்சரவைத் தீர்மானத்துக்கு முட்டுக்கொடுத்துவிட்டு இப்போது கதையளக்கின்றார் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், ஜூன் 17
மாகாண சபைகளால் நிர்வகிக்கப்பட்ட மருத்துவமனைகளை மத்திய அரசு பொறுப்பேற்றுக்கொள்வது அரசமைப்புக்கு முரணானது என்று அமைச்சரவையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களின் தீர்க்கதரிசனமற்ற தீர்மானங்களே இவ்வாறான நிலைமைக்கு காரணம் என்று தனது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார்.
கடற்றொழில் அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார் என, அவரது ஊடகப் பிரிவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
மாகாணசபையால் நிர்வகிக்கப்பட்டு வந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் உட்பட ஒன்பது மாவட்ட பொது மருத்துவமனைகளை மத்திய அரசு பொறுப்பேற்பது தொடர்பாக அமைச்சவையில் பிரஸ்தா பிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக தன்னுடைய ஆட்சேபனையை பதிவுசெய்த கடற்றொழில் அமைச்சர், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில், 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அதிகாரங்கள் மாகாண சபைக்கு பகிரப்பட்டுள்ளது.
குறித்த அதிகாரப் பகிர்வின் அடிப்படையில், மாவட்ட பொது மருத்துவமனைகள், கிராமிய மருத்துவமனைகள் மற்றும் மகப்பேற்று நிலையங்கள் போன்றவை மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.
இந்நிலையில், அவற்றை மத்திய அரசு பொறுப்பேற்றுக்கொள்வது அரசமைப்புக்கு முரணானது என்பதுடன் மாகாண சபைகளை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வை எதிர்பார்க்கின்ற மக்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் செயற்பாடாகவும் அமையும் என்றும் அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தியுள்ளேன் எனத் தெரிவித்தார்
இந்நிலையில், கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை, மாவட்டங்களுக்கான சுகாதார வசதிகளை உயர் தரத்தில் வழங்கும் நோக்குடனேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என வும், விசேட குழுவொன்றை அமைத்து, இது தொடர்பாக ஆராயப்படும் என்றும் உறுதியளித்துள்ளது.
இந்நிலையில் கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது, அக்காலப் பகுதியில் தனக்கிருந்த அரசியல் பலத்தைப் பயன்படுத்தி, மாகாண சபைக்கு பகிரப்பட்ட அதிகாரங்கள் மத்திய அரசு எடுத்துக் கொள்வதை தடுத்து நிறுத்தி உள்ளேன் எனவும், எனினும், தற்போதைய அரசியல் சூழலில் இவ்வாறான விடயங்களை தடுத்து நிறுத்தக்கூடிய அரசியல் பலம் தன்னிடம் இல்லையெனவும் மக்களின் தீர்க்கதரிசனமற்ற தீர்மானங்களின் விளைவு, இவ்வாறான நிகழ்வுகளை தவிர்க்க முடியாத சூழலை ஏற்படுத்தியுள்ளது எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது- என்றுள்ளது. (ஓ.5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பாகவே அதிகாரங்களைப் பறிக்க அரசு முயற்சி

## ஐங்கரநேசன் காட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

இலங்கையின் மாகாண சுகாதாரத் திணைக்களங்களின் கீழ் இயங்கி வந்த ஒன்பது பொது மருத்துவமனைகளை மத்திய சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ்க்கொண்டு வருவதற்கு மத்திய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது அரசு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பாகவே அதற்குரிய அதிகாரங்களைப் பறித்து விட வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளது என்பதையே காட்டுகிறது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

இலங்கையில் மாகாணசபை முறைமை தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் விளைவாக இந்திய அரசு இலங்கை அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு இது ஒருபோதும் தீர்வாகாது என்றபோதும் இதனை ஒரு ஆரம்பப் புள்ளியாகக் கருதி தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தார்கள். ஆனால், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைப் புறந்தள்ளி மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட அற்பசொற்ப அதிகாரங்களைக்கூட தோலிருக்கச் சுளை பிடுங்கும் கதையாகப் பேரினவாத அரசு பறித்து வருகிறது. மாகாண நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த பிரதேச செயலர்களை மத்திய அரசின் மாவட்டச் செயலகங்களுக்குள் உள்ளீர்த்த அரசு, பின்னர் கமநல சேவைகள் திணைக்களத்தையும் பறித்துக்கொண்டது. இன்று வடக்கு மாகாணத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தரக் குளங்கள் எதிலும் மாகாண நிர்வாகம் நேரடியாகத் தூர்வாரவோ அபிவிருத்திகளை மேற்கொள்ளவோ இயலாது. மாகாணத்துக்கென்று எஞ்சியுள்ள பெருங்குளங்கள் சிலவற்றையும் மாகாணங்களுக்கு இடையில் நீரைப் பங்கிடுதல் என்ற செயற்றிட்டத்தின் மூலம் பறிப்பதற்கான பாசனத் திட்டங்களையும் ஆரம்பித்துள்ளது. ஜனாதிபதியின் சுபீட்சமான நோக்கு என்ற செயற்றிட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக 25 பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக்கிய அரசு தற்போது அடுத்த கட்டமாக 32 பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாக மாற்றும் நோக்குடன் அடையாளப்படுத்தியுள்ளது. வடக்குக் கிழக்கைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பறிகொடுப்பதில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை. மத்தியில் எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும் அது அவர்களது அரசே. மாகாண அதிகாரங்களை மத்திய அரசுக்கு தாரை வார்ப்பதில் அரசுடன் சேர்ந்து இயங்கும் தமிழ் அரசியல்வாதிகள் துணைபோவது பெருஞ்சோகம். தமிழ்த் தேசியப்பற்றுறுதியுடன் இயங்கும் அனைத்துத் தரப்பினரும் அரசின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல்கொடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ப)

# ஒன்லைனில் மது விற்பனையா? மருத்துவ அதிகாரிகள் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 17

**பயணக்கட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை முறையாக வழங்குவதற்கான பொறிமுறையை உரிய வகையில் வகுக்காதவர்கள், வீடுகளுக்கு மதுபானத்தையும், புகையிலை உற்பத்திகளையும் வழங்குவதற்கான பொறிமுறையை வகுத்தமை வெட்கக்கேடாகும் இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரி சங்கத்தின் பிரதிநிதி மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவிக்கையில்,

மதுபாவனை மற்றும் புகையிலைப் பாவனையால் நாளாந்தம் 63 பேரும், வருடாந்தம் 23 ஆயிரம் பேரும் உயிரிழக்கின்றனர். நாட்டில் கொரோனாவால் நாளாந்தம் 60 பேர் உயிரிழக்கும் நிலையில், வீடுகளுக்கே சென்று மதுபானம் வழங்கும் நடைமுறை ஆரம்பமானால் நாளாந்த உயிரிழப்பு எண்ணிக்கை 100ஆக அதிகரிக்கக் கூடும்.

நாட்டு மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதற்கு வழியில்லை. விவசாயிகளுக்கு விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான வசதி இல்லை. இவ்வாறான விடயங்களுக்கு உரிய வகையில் பொறிமுறையை உருவாக்க முடியாமல் போனவர்களுக்கு, மதுவுக்கு மட்டும் எவ்வாறு பொறிமுறை வகுக்க முடியும். இது தவறானதொரு முன்னுதாரணமாகும்.

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வீடுகளுக்கே சென்று ஓய்வூதியம் வழங்கலாம். கிளினிக் நோயாளர்களுக்கு வீடுகளுக்குச் சென்று மருந்துகளை விநியோகிக்கலாம். இவை உரிய வகையில் இடம்பெறாத நிலையில் மது மற்றும் புகையிலை விநியோகத்துக்கு பொறிமுறை வகுக்கப்பட்டதன் பின்னணியில் சதி உள்ளதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

இவ்வாறான திட்டம் மூலம் கொரோனா பரவக்கூடும். வீட்டு வன்முறைகள் அதிகரிக்கும். அவ்வாறு இடம்பெற்றால் அது பாதுகாப்பு மற்றும் சுகாதார தரப்புக்கு பிரச்சினையாக அமையும். எனவே, இணையவழி மது விநியோக திட்டத்துக்கு அனைத்து தரப்புகளும் எதிர்ப்பை வெளியிட வேண்டும் - என்றார். (ம-4,44)

# ஒன்றை அறுபதாக்குவது ரணிலுக்கு 'சிம்பிளாம்'!

## முட்டுக்கொடுக்கின்றார் பாலித ரங்கே பண்டார

'42 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு அரசியலமைப்பை மாற்றியமைத்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சி வசம் தற்போதுள்ள ஒரு ஆசனத்தை 60 ஆக்குவதென்பது 'சிம்பிளான' விடயமாகும்.' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக ரணில் விக்கிரமசிங்கவை பெயரிடுமாறுகோரும் ஆவணத்தை அக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார நேற்று தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளித்தார்.

இதன்படி இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை தேர்தல் ஆணைக்குழு நாளை 18ஆம் திகதி வெளியிடும் எனவும், 22 அல்லது 23ஆம் திகதிகளில் நாடாளுமன்ற உறுப்பினராக ரணில் பதவியேற்பார் எனவும் தெரிய வருகின்றது.

தேர்தல் ஆணைக்குழுவிடம் ஆவணத்தை கையளித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ரங்கே பண்டார கூறியவை வருமாறு,

'ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற வாக்குகளுக்காகவே ஓர் தேசியப்பட்டியல் கிடைத்தது. அது இலவசமாகக் கிடைக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம். நாட்டுக்காகவும், மக்களுக்காகவுமே அவரை அனுப்புகின்றோம். கைவசம் ஒன்றுதான் உள்ளது. அதன் பிரதிபலன் 60ஆக மாறும். இதன்மூலம் நான்கூறவரும் விடயம் மக்களுக்கு புரியும். அரசு மற்றும் எதிரணி உறுப்பினர்கள் ஐ.தே.க.வுடன் பேச்சு நடத்தி வருகின்றனர். அதன் பலனையும் எதிர்காலத்தில் அறியக்கூடியதாக இருக்கும்.

42 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு அரசையே முன்னெடுக்க முடிந்ததென்றால், அரசியலமைப்பில்கூட திருத்தத்தை மேற்கொள்ள முடியுமென்றால், வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமென்றால் ஒன்றை 60 தாக்குவதென்பது ரணிலுக்கு சிம்பிளான விடயம்' - என்றார். (ம-44)

### எம்.பிக்களின் பண்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டை மக்களுக்கு வழங்குக

#### வினோ எம்.பி. பிரதமரிடம் கோரிக்கை



வவுனியா, ஜூன் 17

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வருடாந்தம் அபிவிருத்தி திட்டங்களுக்காக அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் தலா ஒரு கோடி ரூபா நிதியை இவ் வருடம் நிறுத்தி அந்த நிதியை கொவிட்-19 தொற்று காரணமாகவும், பயணத்தடை காரணமாகவும் வாழ்வாதாரத்தை இழந்து பட்டினியில் வாடும் ஏழைக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

நடமாடுவதற்கான தடை காரணமாக அன்றாடம் உழைத்து உண்ணும் ஏழைத் தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள் மற்றும் பொருளாதார வலுவற்றோர் என ஏழைக் குடும்பங்கள் பட்டினிச்சாவை என்றுமில்லாதவாறு எதிர்நோக்கியுள்ளனர். அரசால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா நிதி உதவி, சமுர்த்திப் பயனாளிகளுக்கு மட்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. சமுர்த்தி உதவித்திட்டம் பெறாத, சமுர்த்தி உதவி பெறத் தகுதியான குடும்பங்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளன. அவர்கள் பல்வேறு விதமான துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற 5 ஆயிரம் ரூபா நிதி நிவாரணமானதும் கூட பொருள்களின் சமகால, நாளாந்த விலை ஏற்றத்துக்கு ஈடுகொடுக்கக் கூடிய உதவித் திட்டமாகக் கருதமுடியாது. இதனால் இவ் வாண்டுக்கான பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்துக்கான எனது வன்னி மாவட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டை வறுமை நிலையிலுள்ள எனது மாவட்ட ஏழை மக்களின் பசி, பட்டினியைப் போக்க நிவாரணம் வழங்குவதற்காக பயன்படுத்துமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். வன்னி தேர்தல் மாவட்டத்தின் மூன்று நிர்வாக மாவட்டங்களுக்கும் இந் நிதியைப் பகிர்ந்தளித்து அவர்களை பட்டினியிலிருந்தும், மரணப்பிடியிலிருந்தும் மீட்டெடுக்குமாறும் தங்களை வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன். நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இக் கொடிய கொவிட் தொற்றுப் பரவலால் வறுமையும், பட்டினியும் தலைவிரித்தாடுவதால் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களதும் 2250 மில்லியன் ரூபா பண்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டையும் அந்தந்த மாவட்ட கொரோனா நிதிக்காக விடுவிப்பது காலத்தின் தேவை கருதிய ஓர் முன்மாதிரி நடவடிக்கை என கருதுகின்றேன் - என்றுள்ளது. (ப-56)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 5,000 ஏக்கருக்கு உரம் தேவை

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**முல்லைத்தீவு,ஜூன் 17**
**முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 ஆயிரம் ஏக்கருக்கு உரம் தேவைப்படுகிறது என்று மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக பயிர்ச்செய்கையில் விவசாயிகள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டத்தில் உள்ள 10 கமநல சேவை நிலையங்கள் ஊடாக உரம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட நிலையில் பயணத் தடை காரணமாக கமநல சேவை நிலையங்களுக்கு உரங்கள் வரவில்லை.
இதன் காரணமாக தற்போது பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு உரம் வழங்குவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.
கொழும்பில் யூரியா பசளைக்கான தட்டுப்பாடு நிலவுகிறது அறிய முடிகின்றது. குமுழமுனை கமநல சேவை நிலையத்தின் ஊடாகத்தான் கூடுதலான பசளை விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டி உள்ளது. பசளையை மாவட்டத்துக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறோம்.
இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பத்து கமநல சேவை நிலையங்களிலும் விவசாயிகளுக் கான மிகுதி உரம் விநியோகிக்க வேண்டி உள்ளது. குமுழமுனை கமநல சேவை நிலையத்தில் 2 ஆயிரத்து 700 விவசாயிகளுக்கான உர விநியோகத்தில் அயிரத்து 500 விவசாயிகளுக்கு உரம் வழங்கப்பட்ட நிலையில் மிகுதி ஆயிரத்து 200 விவசாயிகளுக்கு உரம் வழங்க வேண்டி உள்ளது - என்றார். (ஐ-13)

# 205 ஏக்கர் பயிர்ச்செய்கைக்கு உரம் வழங்க வேண்டும்

## கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 17
முல்லைத்தீவு துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் 205 ஏக்கர் பயிர்ச்செய்கைக்கு உரம் வழங்கப்பட வேண்டி உள்ளது என்று துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரியதர்சினி தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
தற்போது எமது கமநல சேவை நிலையத்தில் உரம் முடிவடைந்துள்ளது. உரம் வரவில்லை. கல்விளான் விவசாயிகளுக்கும் உரம் வழங்கப்பட வேண்டி உள்ளது. ஒட்டு மொத்தத்தில் 205 ஏக்கர் பயிர்ச்செய்கைக்கு உரம் வழங்க வேண்டியுள்ளது. உரம் வரும் எனக் காத்திருக்கின்றோம். இதேவேளை தற்போது சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள வவுனிக்குளம் உட்பட சகல குளங்களின் கீழான சிறுபோக நெற்செய்கை விவசாயிகளுக்கு துணுக்காய் கமநல சேவை நிலையத்தால் உரம் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ப-13)

# இயற்கை உரம் தொடர்பில் விழிப்புணர்வுக் கூட்டம்

முல்லைத்தீவு,ஜூன் 17
இயற்கை உரம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான கூட்டம் ஒன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
மாவட்டச் செயலர் க.விமலநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
இயற்கை உரத்தைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது தொடர்பாக அரசால் நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இந்த நிலையில் எதிர்காலத்தில் இயற்கை உரத்தைப் பயன்படுத்தி மாவட்ட மட்டத்தில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக இக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.
செயற்கை உரப் பாவனையை பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட விவசாயிகள் இயற்க்கை உரத்துக்கு மாற வேண்டிய தேவை தொடர்பாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இக்கூட்டம் நடைபெற்றது. (ஐ-13)



# யாழ். சர்வமதத் தலைவர்கள் மாவட்டச் செயலருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ் மாவட்டச் செயலர் க.மகேசனை, யாழ் மாவட்ட சர்வமதத் தலைவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.
இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.
கலந்துரையாடலில், மக்களுக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை அதிகரித்தல், தற்போதைய பயணக்கட்டுப்பாடுகளில் மக்களின் அத்தியாவசிய தேவைகள் தடைப்படாமல் செல்லுதல், தனிமைப்படுத்தல் மையங்களில் ஏற்படும் அசௌகரியங்களுக்கு தீர்வு காணுதல் மற்றும் தடுப்பூசியை விரைவில் வழங்குதல் ஆகியவை உள்ளிட்ட சில கோரிக்கைகள் சர்வமதத் தலைவர்களால் மாவட்டச் செயலரிடம் முன்வைக்கப்பட்டுள்ளன. குறித்த கோரிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்டச் செயலர் தெரிவித்தார். இந்த கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக செயலர், மற்றும் உதவிச் செயலர் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (ப-20)

# மணல் ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் சாரதி கைது

யாழ்ப்பாணம், ஜூன் 17
பயணத்தடை காலத்தில் அனுமதிப்பத்திரம் இல்லாது சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை யாழ். மாவட்ட புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர் .
புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் உழவு இயந்திரம் வழிமறிக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.
இதன்போது அனுமதிப்பத்திரமின்றி மண் ஏற்றி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். உழவு இயந்திரம் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. (ப-25,26)



# வவுனியா நகரிலுள்ள வாடிவீடு அரசுக்கும் சபைக்கும் உரியது

## நகரசபைத் தவிசாளர் தெரிவிப்பு

வவுனியா,ஜூன் 17
வவுனியா நகரிலுள்ள வாடிவீடு அரசுக்கும், நகரசபைக்கும் உரித்தான சொத்து என்று வவுனியா நகரசபைத் தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
வவுனியா நகரில் வாடிவீட்டை நடத்துபவர்கள் இரண்டு வருடங்களாக நகரசபைக்கு வாடகை செலுத்தவில்லை. இதனால் 12 லட்சம் ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கான அறிவித்தல் மூன்று மாதங்களுக்கு முன்பாகவே வழங்கப்பட்டும் அதற்கு அவர்கள் பதிலளிக்காத காரணத்தால் நேற்றுமுன்தினம்(திங்கட்கிழமை) எமது வெளிக்கள உத்தியோகத்தர்களுடன் சென்று அறிவித்தல் ஒன்றை ஒட்டியிருந்தோம். இதன்போது அங்கிருந்த இனம் தெரியாத நபர்கள் எங்களுடன் முரண்பட்டனர். அத்துடன் எமக்கு எதிராக பொலிஸில் பொய்யான முறைப்பாட்டையும் செய்தனர். எமது ஊழியர்களை கடமையை செய்ய விடாமல் கலவரத்தை ஏற்படுத்தியிருந்தனர். இது தொடர்பாக நகரசபை சார்பில் பொலிஸில் முறைப்பாடு ஒன்றும் பதிவுசெய்யப்பட்டது.
எந்தவித ஆவணங்களும் இல்லாமல் குறித்த விடுதியை சிலர் சொந்தம் கொண்டாடுகின்றனர். அது அரசுக்கும் நகரசபைக்கும் உரித்தான சொத்து. இதற்கு பின்னால் அரசியல் கட்சி சார்ந்த பிரமுகர் ஒருவர் இருக்கிறார் என அறிந்துள்ளோம்.
கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஒரு கட்சிசார்ந்த அலுவலகம் அந்த விடுதியில் செயற்பட்டது.
விடுதியின் முகாமையாளர் அந்தக்கட்சியின் வேட்பாளர் ஒருவருக்கு பணரீதியாக பல்வேறு உதவிகளை செய்திருந்தார். அதற்கு நன்றிக்கடனாக அந்த விடுதியை அவருக்கே வழங்குவதற்கு உறுதிசெய்துள்ளார் எனவும் அறிந்துள்ளோம் - என்றார். (ஐ-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஓரணியில் எதிர்ப்போம்!

வடக்கு மாகாணத்தின் நான்கு மருத்துவமனைகள் மாகாண சபையின் ஆளுகையின் கீழிருந்து எடுக்கப்பட்டு மத்தியின் அதிகாரத்துக்கு உட்பட்டவையாக மாற்றப்பட்டுள்ளன. வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மருத்துவமனைகளே இவ்வாறு மத்தியின் ஆளுகையின் கீழ் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

பொது மருத்துவமனைகளின் சேவை வழங்கலின் தரம், சமத்துவம் மற்றும் வினைத்திறன் போன்றவற்றை அதிகரிப்பதற்காகவும் இலகுவாக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் அவற்றை சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவருவது பொருத்தமென இனங்காணப்பட்டு அமைச்சரவையின் அனுமதியுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இந்த அதிகார மாற்றலுக்கு விளக்கம் கற்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தக் கதைகளெல்லாம் முழுப்பூசணிக்காயை மட்டுமல்ல ஒரு பூசணித் தோட்டத்தையே சோற்றில் மறைக்கும் செயல் என்பது யாவரும் அறிவர்.

மாகாண சபைகளுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக வடக்கு மாகாண சபைக்கு இந்தியப் பரிந்துரையின் அடிப்படையில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் நெடுங்காலமாக முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் இருப்பதையும் பிடுங்கியெடுக்கும் விதத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது கொழும்பு.

மாகாண சபைகளுக்கு உரிய ஆட்சிக் காலம் முடிவடைந்து பல மாதங்கள் கடந்துவிட்டன. இலங்கையில் அனைத்து மாகாணங்களிலும் தற்போது ஆளுநர் தலைமையிலான ஆட்சிதான் நடைமுறையில் உள்ளது. எனவே மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் என்று இலங்கை அரசுக்கு அழுத்தங்கள் குவிந்து வருகின்றன. குறிப்பாக இந்தியா இந்த அழுத்தத்தை நேரடியாகவும் திரைமறைவிலும் வழங்கி வருகின்றது. ஆதலால் விரும்பியோ விரும்பாமலோ விரைவில் மாகாண சபைத் தேர்தலொன்றுக்குச் செல்லவேண்டிய தேவை இலங்கை அரசுக்கு இருக்கின்றது. இத்தகையதொரு பின்னணியை நாம் இந்த அதிகார மாற்றத்துக்கான முக்கிய காரணமாகக் கொள்ள வேண்டும்.

அதாவது மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட முன்னர் வடக்கு மாகாண சபையின் ஆளுகையை, அதிகாரத்தை படிப்படியாக இல்லாமலாக்கிவிட்டு வெறும் கண்துடைப்புக்காக ஒரு தேர்தலை நடத்தி வடக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்கும் தமிழ்த் தேசியத் தரப்புகளை வெறும் பொம்மைகளாக வைத்து அழகு பார்ப்பதுதான் கொழும்பின் கபடத்தனம். அதாவது, இந்தியா கேட்பதுபோன்று, தமிழ்த் தரப்புக்கள் கேட்பதுபோன்று தேர்தல் நடத்தப்பட்டாயிற்று என்ற செய்தியை உரத்துச் சொல்லிவிட்டு அந்தத் தேர்தலின் மூலம் தெரிவாகும் தரப்பை பயனற்றதாக ஆக்கி அதிகாரத்தை தன்பிடிக்குள் கொழும்பு வைத்திருக்கப்போகின்றது. அதற்கான முனைப்புத்தான் இது.

உண்மையில் சிங்களத் திணிப்பு, பௌத்த மயமாக்கல், கலாசார அழிப்பு மற்றும் பாரம்பரிய சிதைப்பு ஆகிவற்றுக்கு நிகரான பாரதூரமான விடயம் இது. எனவே தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் இருக்கும் வேறுபாட்டைக் களைந்துவிட்டு இது விடயத்தில் ஓரணியில் ஒன்றுதிரண்டு கொழும்பின் இந்தக் கபடத்தனத்தையும், அதிகார கைமாற்றலையும் சட்டரீதியாக விரைந்து சவாலுக்கு உட்படுத்த வேண்டும். இல்லையேல் இன்று மருத்துவமனைகளில் ஆரம்பித்த விடயம் நாளை இன்னுமின்னும் நீண்டு செல்லும். அத்தகையதொரு பேராபத்தை தடுக்க – தவிர்க்க மருத்துவமனைகளின் கைமாற்றலுக்கு நாம் தற்போது வெளிப்படுத்தப்போகும் எதிர்ப்பு பாரதூரமாக இருக்க வேண்டும்.




# தமிழகத்தில் போராடும் ஈழ ஏதிலிகளுக்காக யாழ்ப்பாணத்திலும் உறவுகள் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஜூன் 17**

**தமிழகத்தில் போராட்டத்தில் ஈடுபடும் உறவுகளுக்கு ஆதரவு தெரிவித்து, தடுத்து வைக்கப்பட்டவர்களது உறவினர்கள் யாழ்ப்பாணம் நவாலிப் பகுதியில் நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.**




திருச்சி மத்திய சிறையில், சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும், ஈழத் தமிழர்களின் விடுதலையை வலியுறுத்தி ஈழ அகதிகள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை கடந்த ஒரு வாரகாலமாக முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுடைய போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையிலேயே இந்தப் போராட்டம் இடம்பெற்றிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்;

எமது பிள்ளைகள் அங்கு சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கின்றனர். மூன்று நாள்களில் விடுதலை செய்யப்படும் என்று கூறித்தான் கைதுசெய்தனர். அதன் பின்னர் அவர்களுக்கு மாற்று உடை கூட வழங்காமல் நூறு நாள்கள் சிறையில் அடைத்து கொடுமைப்படுத்தினார்கள். தற்போது விசாரணை செய்து விடுவிக்கப்படுவர் என்று கூறி திருச்சி மத்திய சிறைச்சாலை சிறப்பு முகாமில் அடைத்துவைத்துள்ளார்கள். ஆனால் இதுவரை காலமும் அவர்களை விடுதலை செய்யவில்லை. தற்போது தமிழகத்தின் முதலமைச்சராக பதவியேற்றிருக்கும் மு.க.ஸ்டாலின் மக்களுக்கு நன்மை செய்வேன் என்று கூறிப் பதவியேற்றார். இந்த நிலையில் எமது உறவுகளின்மீது அவர் கருணை காட்டாதது ஏன்? இலங்கை அரசும், தமிழக அரசும் ஒன்றிணைந்து எமது உறவுகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-27)

# வவுனியா பொலிஸாருக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு!

வவுனியா,ஜூன் 17

வவுனியா பொலிஸாருக்கு எதிராக பொலிஸ் சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று வவுனியா நகர சபைத் தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபைத் தவிசாளர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எந்தவித முன்னறிவித்தலுமின்றி நகர சபைத் தலைவரான என்னை பொலிஸ் நிலையம் அழைத்து கைதுசெய்தனர். பொலிஸாருடைய செயற்பாடு பக்கச்சார்பான செயற்பாடாகவே இருந்தது. அதிகார பலமும் அரசியல், பணபலமும் இருந்தால் எதையும் செய்யலாம் என்ற நிலைமையை இதன் மூலம் அறியமுடிந்தது. எனவே சாதாரண மக்களுக்கான நீதி இந்த பொலிஸ் நிலையங்களில் எப்படி கிடைக்கும் என்பது கேள்வியாகவுள்ளது. அத்துடன் எமது உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவிக்கப்பட்டது என தொடரப்பட்ட வழக்கில் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது பொலிஸாரின் அசமந்தப் போக்கே.

பொலிஸ் சேவை ஆணைக்குழுவுக்கு இது தொடர்பாக முறைப்பாடு ஒன்று வழங்கியுள்ளோம். வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றிலும் முறைப்பாடு பதிவுசெய்யவுள்ளோம் - என்றார். (ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திரபுரம் நீவில் மணல் அகழ்வை கட்டுப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பம்



கிளிநொச்சி, ஜூன் 17
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உருத்திரபுரம் நீவில் பகுதியில் பேராற்றை அண்டிய நெற்ச் செய்கை மேற்கொள்ளும் வயல்களில் இடம்பெறும் சட்ட விரோத மணல் அகழ்வை பார்வையிடுவதற்காகவும், உரிய நடவடிக்கையை மேற் கொள்வதற்காகவும் நீவில் கமக்கார அமைப்பினர் ,இரா ணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோர் நேற்றுமுன் தினம் அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர்.
நீவில் பகுதி வயல் நிலங்களில் பெரும் குழிகள் அமைக் கப்பட்டு சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றமையை மேற்படி தரப்பினர் நேரில் சென்று உறுதிபடுத்தினர்.
தொடர்ந்து கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி விவசாயிகளோடு கலந்துரையாடினார்.
குறித்த மணல் அகழ்வை தடுத்து நிறுத்தாவிட்டால் தமது விவசாய நிலங்கள் உவர் நிலமாக மாறும் நிலை ஏற்படும் என இதன்போது விவசாயிகள் தெரிவித்தனர்.
விவசாயிகளிடம் கருத்து தெரிவித்த பொலிஸ் பொறுப்பதி காரி தனக்கு மேலுள்ள உய ரதிகாரியுடன் கலந்துரையாடி இந்த சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுக்கப்ப டும் என்றும் மணல் அகழ்வு தொடர்பான தகவல்களை தனக்கு அவ்வப்போது தெரி விக்குமாறும் தெரிவித்தார்.
அத்துடன் தனது தொலை பேசி இலக்கத்தையும் வழங்கி யிருந்தார். (ப-214)

# தம்புள்ளைக்குச் சென்று மரக்கறிகளை கொள்வனவுசெய்ய அனுமதி வழங்குக

## வவுனியா வியாபாரிகள் கோரிக்கை



**வவுனியா, ஜூன் 17**
**தம்புள்ளை பகுதிக்குச் சென்று மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு வவுனியாவைச் சேர்ந்த மரக்கறி வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பாக அவர்கள் தெரி விக்கையில்;
தம்புள்ளை பகுதிக்குச் சென்று மரக் கறிகளைக் கொள்வனவு செய்வ தற்கான அனுமதி எமக்கு வழங் கப்படவில்லை. இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள் ளது. வவுனியாவில் விளையும் மரக்கறி வகைகளை கனரக வாக னங்களில் தென்பகுதிக்கு கொண்டு செல்பவர்களுக்கே அனுமதி வழங் கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின் றது. எனினும் இங்கு மரக்கறிவகை கள் தட்டுப்பாடாகவே உள்ளன.
அத்துடன் இங்கிருந்து எடுத்துச் செல்லப்படும் மரக்கறிகளுக்கு தம்புள்ளைச் சந்தையில் சரியான விலை கிடைப்பதிலும் பிரச் சினை இருக்கின்றது. நாங்கள் இம்மாவடத்தில் தொடர்ச்சியாக மரக்கறி விற்பனையில் ஈடுபட்டு வருகின்றோம். வெளிமாவட்டத் தைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து விற்பனை செய்கின்றனர். ஆனால் எங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. எனவே இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் நட வடிக்கை எடுக்கவேண்டும்.
இது தொடர்பாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளரிடம் கேட்டபோது;
பாஸ் அனுமதியைப் பெற்றுச்செல் பவர்கள் இங்கு விளையும் மரக்க றிகளை ஏற்றிச்செல்லாமல் வெளி மாவட்டங்களில் உள்ள மரக்கறிக ளையே கொள்வனவுசெய்து இங்கு கொண்டுவருகின்றனர். இதனால் எமது மாவட்டத்தில் மரக் கறிகள் தேங்கும் நிலை ஏற்பட்டுள் ளது. அத்துடன் பலருக்கு நாம் பாஸ் வழங்கிய நிலையில் வாக னங்களின் நடமாட்டம் அதிகரித் துள்ளது என்று சுகாதார அதிகா ரிகளும் தெரிவித்திருந்தனர். இத னால் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கு குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள் ளது. அவர்களைத் தொடர்பு கொண்டு ஏனைய வியாபாரிகள் மரக்கறிகளைக் கொள்வனவு செய்யமுடியும் - என்றார். (ப-110)




# கிளி.யில் பாதிக்கப்பட்டோருக்கு விக்கி எம்.பியும் உதவிக்கரம்

கிளிநொச்சி, ஜூன் 17
நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணத் தடையால் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு தமிழ் மக்கள் கூட் டணியின் செயலாளர் நாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனால் உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன.
பாரதிபுரம், மலையாளபுரம், கோணாவில் கிழக்கு, செல்வா நகர், திருவையாறு, பரந்தன், பிரமந்தனாறு, கல்லாறு, சாந்தபுரம், மற்றும் அம்பாள் குளம் ஆகிய கிளிநொச்சி மாவட்டத்தில் பயணத் தடையால் அதிகம் பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த அடையாளப்படுத்தப்பட்ட உதவி தேவைப்படுவோர்க்கே இந்த உதவிப் பொருள்கள் வழங் கப்பட்டன. விக்னேஸ்வரனுடன் இணைந்து தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர்கள் பொருள் களை வழங்கினர்.
குறித்த வாழ்வாதார உதவிகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தனது தனிப்பட்ட நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கியதுடன். சிட்னி தமிழ் உறவு கள் சிலரும் நிதிப் பங்களிப்பு வழங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# வயல் நிலத்தில் மணல் நிரவ முல்லையிலும் தடை விதிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 17
வயல் நிலங்களில் மணலை நிரவி அந்த நிலத்தை மேட்டு நிலம் ஆக்கும் செயற்பாடு, முல்லைத்தீவிலும் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. முள்ளியவளை கமநல சேவை நிலையத்தால் இது தொடர்பில் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.
முள்ளியவளை கமநல சேவை நிலைய எல்லைக் குட்பட்ட பகுதிகளில் வயல் நிலங்களில் மண் குவிக் கப்பட்டு கட்டடங்கள் அமைப்பதற்கான முயற்சிகள் தொடர்பாக கமநல சேவை நிலையத்தால் பொலி ஸாரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.
இந்த நிலையில் கனரக வாகன உதவியுடன் வயல் நிலத்தில் மண் குவிக்கப்பட்டு வருகிறது என்று கடந்த திங்கட்கிழமை கமநலசேவை நிலையத்தினருக்கு தகவல் கிடைத்தது. அவர்கள் அது தொடர்பில் பொலி ஸாருக்கு அறிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் வயல் நிலத்தில் மேடு ஆக்கும் பணியில் ஈடுபட்டிருந்த கனரக வாகன உரிமையாளரைக் கைது செய்து நீதிவான் மன்றில் முற்படுத்தினர். (ப-13)





# உப்புமாவெளி மணல் குவியல் விவகாரம்: அறிக்கை தயாரிக்கிறது அதிகாரிகள் குழு

முல்லைத்தீவு, ஜூன் 17
முல்லைத்தீவு உப்புமாவெளியில் குவிக்கப்பட்டுள்ள மணல் குவியல்க ளைப் பார்வையிட்டு அறிக்கை தயா ரிக்க உள்ளோம் என்று முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலர் க.கன கேஸ்வரன் தெரிவித்தார். இது தொடர் பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
உப்புமாவெளியில் உள்ள ஆயர் இல் லக் காணியில் குவிக்கப்பட்டுள்ள மணல் குவியல்கள் தொடர்பாக முல் லைத்தீவு பொலிஸாரால்
நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. மாவட்டச் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுவின் அறிக்கையை பொலிஸார் கோரியிருந்த நிலையில் இன்று (நேற்றுமுன்தினம்) மாவட்டச் செயலகத்தின் சார்பில் நானும், திட்ட மிடல் பணிப்பாளரும், புவிச்சரித வியல் சுரங்கப் பணியகத்தின் பொறி யியலாளர், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட அலுவலர், முல் லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் ஆகி யோர் அடங்கிய குழுவினர் உப்புமா வெளிக்குச் சென்று குவிக்கப்பட்டுள்ள மணல் குவியல்களைப் பார்வையிட் டுள்ளோம். மாவட்டச் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுவின் அறிக்கையை பொலிஸாரிடம் கையளிக்க உள்ளோம் என்றார்.
முல்லைத்தீவு உப்புமாவெளியில் உள்ள காணி ஒன்றில் மலை போன்று மணல் குவியலாகக் குவிக்கப்பட்டுள் ளன. அங்கிருந்தே மணல் வெளியி டங்களுக்கு எடுத்துச்செல்லப்படுகின் றது. குறித்த செயற்பாடு சட்டபூர்வமா னதாகவும், சட்டவிரோதமாகவும் இடம் பெறுகின்றது என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது. (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் பயணக் கட்டுப்பாட்டால் மலர்ச்செய்கையாளர்களும் பாதிப்பு

**நுவரெலியா, ஜூன் 17**

**பயணக் கட்டுப்பாட்டால், நுவரெலியா மாவட்டத்தில் பூச்செடிகள் மற்றும் விற்பனைக்காக வளர்க்கப்படும் பூக்கள் ஆகியவற்றை உற்பத்திசெய்வோரும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.**



இந்த அசாதாரண காலப்பகுதியில் பொது வைபவங்கள், வீட்டு வைபவங்கள் மற்றும் ஆலய வைபவங்கள் போன்றவை தடைப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் குறித்த வைவங்களை நம்பி தமது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டுவரும் நுவரெலியா மாவட்ட மலர்ச்செய்கையாளர்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாகியுள்ளனர். திருமணங்கள், வீட்டு வைபவங்கள் மற்றும் ஆலய நிகழ்வுகள் உள்ளிட்ட பொது வைபவங்களுக்குப் பாவிக்கப்படும் மலர்களை உற்பத்திசெய்வதும் விற்பனைக்குக் கொண்டுசெல்வதையும் தொழிலாகக் கொண்டவர்களே, இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் செடியிலிருந்து உரிய காலப்பகுதியில் பூக்களை அகற்ற முடியாததால் பூக்கள், மழையால் பழுதாகியும், உதிர்ந்து கொட்டும் நிலையும் உருவாகியுள்ளது. இதனால் நுவரெலியா மாவட்டத்தில் மலர்ச் செய்கை உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் தமது ஜீவனோபாய வாழ்க்கை வருமானத்தை இழந்துள்ள நிலையில், பெரும் பொருளாதார சிக்கலுக்கும், மலர்கள் வளர்ப்புக்காக செய்த செலவுகளை ஈடுகட்ட முடியாது கடன் சுமைகளுக்கும் ஆளாகியுள்ளனர்.



நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஹக்கலை, மீப்பிலிமான, சாந்திபுர, டொப்பாஸ், பிளக்பூல் மற்றும் லபுக்கலை உள்ளிட்ட இன்னும் பல பிரதேசங்களில் விலையுயர்ந்த பூக்கள் வளர்ப்பாளர்கள் மற்றும் பூக்களைக் கொள்வனவுசெய்து விற்பனை செய்வோரே தமது நாளாந்த வருமானத்தை இழந்துள்ளனர் என்றும் இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப)



## அனுமதிப்பத்திரங்கள் 21ஆம் திகதி காலாவதி

கொழும்பு,ஜூன் 17

பயணக்கட்டுப்பாட்டுக்காலத்தில், அத்தியாவசிய பொருள் விநியோகத்துக்காக, வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்கள் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமையுடன் காலாவதியாகும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர், அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த அனுமதிப்பத்திரங்கள் 14 நாள்களுக்கே செல்லுப்படியாகும் நிலையில், பயணக்கட்டுப்பாடு மீண்டும் நீடிக்கப்பட்டதால் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## இந்தியப் பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்கள் அவதி

கொழும்பு, ஜூன் 17

இந்தியாவின் அதிக மாநிலங்கள் கொரோனாத் தொற்றால் முழுமையாக முடங்கியுள்ள நிலையில், அங்கு தங்கியிருந்து இந்திய பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும், இலங்கை மாணவர்கள் பெரும் அவதியை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஒடிசா மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகம், வடமாநில பிரதேசங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள், தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகங்கள் என இந்தியாவில் பல்வேறு பிரதேசங்களில் இலங்கை மாணவர்கள் சிக்கியுள்ளனர். இவர்கள் இலங்கைக்குத் திரும்பி வருவதற்கான விமானப் பயணசீட்டுக்களுக்கு முன்பதிவுகள் செய்திருந்தும், அவை இரத்துச்செய்யப்பட்டுள்ளன. தற்போது உணவு மற்றும் பல்வேறு சுகாதார நெருக்கடிகளை அவர்கள் எதிர்கொண்டுள்ளனர்.

இந்த விவகாரத்தில் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையீடுசெய்ய வேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4)

## காலாவதி மருந்துகள் சூட்சுமமாக விற்பனை

### ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 17

சொகுசு மாடி வீடொன்றில் சூட்சுமமாக விற்பனை செய்யப்பட்ட பெருந்தொகையான மருந்துப் பொருள்களை, தேசிய மருந்துகளை ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

தெஹிவளையிலுள்ள வீட்டில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த காலாவதியான மருந்துப்பொருள்களை, போலியான லேபல்களைத் தயாரித்து மீண்டும் சந்தைகளுக்கு விநியோகித்து வந்துள்ளனர்.

தகவலறிந்த தேசிய மருந்துகளை ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையின் அதிகாரிகள் குறித்த வீட்டை சுற்றிவளைத்தனர். அங்கிருந்து பெருந்தொகையான மருந்துப்பொருள்களைக் கைப்பற்றினர்.



சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தேசிய மருந்துகளை ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, காலாவதியான மருந்துகள் சந்தைகளில் காணப்படுமாக இருந்தால், அவற்றை அகற்றுவதற்கு தேசிய மருந்துகளை ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையின் அதிகாரிகள் இருவர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-4)

## யானைகள் தாக்கி 55 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 17

யானைகள் தாக்கியும், மோதியும் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 55 பேர் உயிரிழந்துள்ளனர் என்று வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதேவேளை கடந்த 6 மாதங்களில் மாத்திரம் 158 யானைகள் உயிரிழந்துள்ளன.

36 யானைகள் மின்சார வேலிகளில் சிக்கியும், 15 யானைகள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியும், 45 யானைகள் அறியப்படாத காரணங்களாலும் உயிரிழந்துள்ளன என்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-4)

## ஆசிரியர்கள், அதிபர்களுக்கு கடன் சலுகை வழங்கவும்

### பிரதமருக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூன் 17

அதிபர் மற்றும் ஆசிரியர்கள் வங்கிகளில் பெற்ற கடன்களுக்கு சலுகை வழங்க நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. அந்தக் கோரிக்கை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது;

நாட்டில் கொவிட் 19 தொற்றுநோய் தீவிரமாகப் பரவியுள்ளதனால் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு கிட்டத்தட்ட இவ் வருடம் மூன்று மாதங்களாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில், மாணவர்களுடைய கல்வியை நிகழ்நிலை மூலம் புதுப்பிப்பதற்குத் தேவையான கருவிகள் மற்றும் டேட்டாக்களை அரசாங்க நிதியுதவி இன்றி தங்கள் தனிப்பட்ட செலவில் கொள்வனவு செய்வதன் மூலமே கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. அரச சேவையில் 24 ஆண்டுகால கடுமையான சம்பள முரண்பாடுகள் காரணமாக ஆசிரியர்களும், அதிபர்களும் அல்லற்படுகின்றமை அனைவரும் அறிந்த விடயமே. தரம் 1 ஆசிரியரின் குறைந்தபட்ச தின சம்பளமும் சுமார் அயிரத்து 498 ரூபா ஆகும். இந்தச் சூழ்நிலையில் பெரும்பான்மையான ஆசிரியர்கள் கடுமையான பொருளாதார கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, குரு சேதா போன்ற பல்வேறு வங்கிக் கடன் திட்டங்களால் பெறப்பட்ட கடன்களுக்கான மாதாந்த தவணைகளையும் அதற்கான வட்டியையும் திருப்பிச்செலுத்த வேண்டாம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இந்த மாதத்திலிருந்து (ஜூன்) மீண்டும் பாடசாலைகள் திறக்கும் வரை கடன் தள்ளுபடி வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கேட்டுக்கொள்கிறது - என்றுள்ளது. (ஐ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய சக்தி மின் உற்பத்திக்காக

# இந்தியா 100 மில். டொலர் வழங்கியது

கொழும்பு, ஜூன் 17

சூரிய சக்தியிலான மின் உற்பத்தியை அதிகரித்து, தேசிய மின் கட்டமைப்புக்கு மீள்பிறப்பாக்கச் சக்தி வளப் பங்களிப்பை அதிகரிக்கும் திட்டத்தை விரைவு படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்திய அரசு இலங்கைக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்கியுள்ளது.

இதற்காக, அரச கட்டிடங்கள், சமயத் தலங்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் வீடுகளின் பங்களிப்பைப் பெற்று, சூரிய மின்சக்தியை உற்பத்தி செய்வதே அரசின் முக்கிய திட்டமாகும். இதன் மூலம் குறைந்த வருமானம் பெறும் வீடுகளுக்கான பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அரச நிறுவனங்களில் மின்சாரத்துக்காக செலவாகும் அதிக தொகையைக் குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

காணித் தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் வகையில், நீரில் மிதக்கும் சூரிய மின்சக்தி முறைமைகளை நிறுவுவதும் இதில் உள்ளடங்கும். இதன் முதற்கட்டமாக, நாடாளுமன்றத்துக்குத் தேவையான மின்சாரத்தை, தியவன்னா ஓயாவை மையமாகக்கொண்டு ஆரம்பிக்கப் படவுள்ளது.

அத்துடன் தேசிய மின் கட்டமைப்புக்கு பிரவேசிக்க முடியாதிருக்கும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு, மின்கலங்களின் மூலம் சூரிய மின்சக்தி களஞ்சிய வசதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி திட்டத்துக்காக, இந்திய அரசு இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வங்கியின் ஊடாக 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதுடன், இதற்கான இரு தரப்பு கடன் ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கும் இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள இக்கடன் ஒப்பந்தம், நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி கோத்தாபய, மின்சக்தி இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் முன்னிலையில், நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆடிகலவுக்கும் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையில் பரிமாறிக்கொள்ளப்பட்டது. (ஒ.இ)



# பஸ்களை கடலில் போடுவதற்கு இந்திய மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

**மன்னார், ஜூன் 17**

**பயன்பாட்டில் இல்லாத பஸ்களை கடலுக்குள் போடும் இலங்கை அரசின் செயற்பாட்டைக் கண்டித்து, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழகத்தின், இராமேஸ்வரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**



இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;

தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கோடு இலங்கை அரசு, சர்வதேச கடல் எல்லைக்கு அருகே இந்திய இலங்கை மீனவர்கள் பாரம்பரியமாக மீன்பிடித்து வரும் இடங்களான கச்சத்தீவு, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆகிய கடற் பகுதிகளில் பயன்பாட்டில் இல்லாமல் கைவிடப்பட்ட இலங்கை அரச போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களை போடுகின்றது. தமிழக மீனவர்கள் இந்தியக் கடற் பரப்பில் மீன் பிடித்தாலும் அவர்கள் விரிக்கும் மீன்பிடி வலைகள் காற்றின் வேகம் காரணமாகவும், கடல் நீரோட்டம் காரணமாகவும் இலங்கை கடற்பகுதிக்கும் செல்லக்கூடும். இதனால் படகுகள் மற்றும் வலைகள் சேதமடைந்து படகு ஒன்றுக்கு பல ஆயிரம் ரூபா இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. அத்தோடு பஸ்களை கடலில் இடுவதால் கடலும் மாசுபடும். எனவே இலங்கை மீன் வளத்துறையினர் இந்தத் திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் - என்றனர்.

அதேபோல் நாளுக்கு நாள் உயர்வடையும் எரிபொருள் விலையால் மீனவர்கள் தங்களது படகுகளை இயக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

எனவே மத்திய, மாநில அரசுகள் கலால், சாலை வரிகளை நீக்கி மீனவர்களுக்கு உற்பத்தி விலையில் டீசலை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். (ப-56)

# பேர்ள் கப்பல் இரசாயனங்கள் இந்து சமுத்திரத்தில் கலப்பு?

கொழும்பு, ஜூன் 17

இலங்கையில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் உள்ள இரசாயனங்கள் இந்து சமுத்திரத்தில் கலப்பதற்கான ஆபத்துள்ளது என்று இரசாயன விஞ்ஞானிகள் எதிர்வு கூறியுள்ளனர்.

கப்பலில் 800 தொன் சோடியம் ஹைட்டிரொக்சைட் இரசாயனங்கள் இருந்தமையால், அவை கடலில் கலக்க வாய்ப்புண்டு என்று விஞ்ஞானிகள் எதிர்வு கூறியுள்ளனர். அதனால் நீண்ட காலப்பாதிப்பு ஏற்படலாம் என்று சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

பிளாஸ்டிக் துகள்களே அதிக பாதிப்பை ஏற்படுத்தும். அதனால் அவற்றைச் சேகரிக்க முயல்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை கப்பலில் இருந்து சாம்பல் நிறம் வெளிவருகின்றது. கடல்நீர் நிறம் மாறியுள்ளது என்று கப்பலின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4)

# கப்பலின் பயணத்தரவு சாதனத்தை ஆய்வுசெய்ய ஒத்துழைப்புத் தேவை

கொழும்பு, ஜூன் 17

கொழும்பு கடற்பகுதியில் தீப்பற்றி எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் பயணத்தரவு தொடர்பான சாதனம், அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச் சாதனத்தில் கப்பலின் பயணத்தகவல் மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதேவேளை குறித்த சாதனத்தின் மேலதிக தரவு பகுப்பாய்வுக்கு, அதன் தாய் நிறுவனத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்று அரச இரசாயன பகுப்பாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4)

கடல் ஆய்வுக்காக

# இலங்கை வருகின்றது ஐ.நாவின் விசேட குழு

கொழும்பு, ஜூன் 17

கடல் சூழலியல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் விசேட குழுவொன்று, இலங்கைக்கு வருகைதரவுள்ளது என்று கடல் மாசுறல் தடுப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் தலைவர் தர்ஷனி லஹந்தபுர தெரிவிக்கையில்,

அண்மையில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடுசெய்வதும், அதற்கான எதிர்கால நடவடிக்கை தொடர்பில் ஆலோசனை வழங்குவதும் இந்தக் குழுவின் நோக்கம்.

அதனடிப்படையில் நச்சுப் பொருள்கள் தொடர்பான நிபுணர்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புத் தொடர்பில் பகுப்பாய்வுசெய்யும் நிபுணர்கள் ஆகியோர் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.

இவர்கள் சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பில், இலங்கை அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பர் - என்றார். (ம-4)

## மீன்கள் வியாபாரம் படுவீழ்ச்சி பச்சையாக உண்ணும் அவலம்

கொழும்பு, ஜூன் 17

இலங்கைக் கடற்பரப்பில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பறியதன் எதிரொலியாக தென்பகுதியில் மீன்களின் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் வியாபாரிகள் பச்சையாக மீன்களை உண்டு, பாதிப்பில்லை என்பதை உறுதிப்படுத்தி விற்பனையில் ஈடுபட்டுள்ளனர்.

பேலியகொடை மீன் சந்தை வியாபாரிகள் இவ்வாறு கடுமையான நெருக்கடி நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

'நாம் தினம் தோறும் பச்சையாக மீன்களைச் சாப்பிட்டுக் காட்டுகிறோம். எனினும் மீன் வியாபாரம் மந்தமாகவே உள்ளது' என்று வியாபாரிகள் தெரிவித்தனர். (ம-4)

பேர்ள் கப்பலின்

# உள்ளூர் முகவரும் கைதாகி விடுதலை

கொழும்பு, ஜூன் 17

எம்வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் உள்ளூர் முகவரான கொன்சோரியம் லங்கா நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன ஹெட்டியாராச்சி குற்றப் புலனாய்வுப் பிரிவால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தால் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கப்பல் விபத்துத் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இரண்டு தினங்களுக்கு முன்னர் கப்பல் கப்டனான ரஷ்யப் பிரஜையை கைதுசெய்தனர். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் கப்பலின் உள்ளூர் முகவரை வாக்குமூலம் வழங்கவருமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பல தடவைகள் அறிவுறுத்தியிருந்தும் அவர் சமூகமளிக்கவில்லை. இந்த நிலையில் அவரைக் கைதுசெய்யுமாறு சட்டமா அதிபர் பணித்திருந்தார்.

நேற்றுக் காலை தனது சட்டத்தரணிகள் ஊடாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் சரணடைந்த உள்ளூர் முகவர், கொழும்பு உயர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். ஒரு லட்சம் ரூபா பிணையிலும், 10 லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார்.

அவரது கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும், அவருக்கு வெளிநாடு செல்வதற்கு பயணத் தடை விதித்தும் நீதிமன்றம் உத்தர விட்டது. (ஒ.5.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாபயவின் எட்டப்பன் ஜயசுந்தர

## ஆனந்த தேரர் சாடல்



**கொழும்பு, ஜூன் 17**
**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் மிகப்பெரிய எட்டப்பனாக கலாநிதி ஜயசுந்தரவைக் காண்கின்றோம். ஜனாதிபதியின் வீழ்ச்சிக்கு அவரே காரணம்.**

இவ்வாறு நாரஹேன்பிட்டி அபயாராமய விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
மிகக் குறுகிய காலத்தில் மக்களின் வரவேற்பை இழந்த அரசு கோத்தாபய ராஜபக்சவின் அரசே. நாம் மன்னர் என நினைத்துக்கொண்டு எவரேனும் செயற்படுவதாக இருந்தால், அது அந்த தனிநபரின் தவறு அல்ல. நாட்டை நிர்வகிக்கும் அதிகாரிகளின் குறைபாடே அதற்குக் காரணம்.
எந்தவொரு நபரையும் சுற்றி எட்டப்பன்மார் இருப்பார்கள். புரோகிதர்களும் இருப்பார்கள். புரோகிதர்கள் கூறினால் அதனையே பின்பற்றுவார்கள். பி.வி.ஜயசுந்தரவை பதவியில் இருந்து நீக்கி, வழிநடத்தக் கூடிய ஒருவரை நியமிக்க வேண்டும் அவ்வாறு செய்யாவிட்டால் எதிர்காலத்தில் பெரும் எதிர்ப்பு நடவடிக்கையொன்றை ஏற்பாடு செய்வோம்- என்றார். (ம-4)

## கட்சிதாவிய 16 பேர் மீண்டும் ஐ.தே.கவில்

கொழும்பு, ஜூன் 17
ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து, ஐக்கிய மக்கள் சக்திக்குச் சென்ற, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் 16 பேர் மீண்டும் ஐ.தே.கவில் இணைந்துள்ளனர் என்று கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.
கம்பஹா நகரசபையின் 10 உறுப்பினர்கள், கண்டி மாநகர சபையின் மூன்று உறுப்பினர்கள் மற்றும் உடபலாத்த பிரதேச சபையின் மூன்று உறுப்பினர்கள் ஆகியோர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளனர்.
இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த கம்பளை நகரசபையின் உறுப்பினர்கள் அனைவரும் மீண்டும் ஐ.தே.கவில் இணைந்துள்ளனர். இது தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து, விபரங்களை அறிவிப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி களத்தில்

### நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கையெழுத்து திரட்டல்

கொழும்பு, ஜூன் 17
வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கையெழுத்து திரட்டும் நடவடிக்கையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பித்துள்ளது.
சுபநேரத்தில் முதலாவது கையெழுத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வைத்தார். அதன்பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டனர். சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரின் கூற்றின்படி அமைச்சரவையின் அனுமதியின்றி வலுசக்தி அமைச்சர் தன்னிச்சையாக எரிபொருள்களின் விலையை அதிகரித்தமை, கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தியமை உட்பட 10 காரணங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் முன்வைக்கப்படவுள்ளன.
இந்தப்பிரேரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி என்பவையும் ஆதரவு வழங்கவுள்ளன என்று தெரியவருகின்றது. அதேவேளை சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள பஸில் ஆதரவு உறுப்பினர்கள் சிலர் ஆதரித்து வாக்களிக்காவிட்டாலும், நடுநிலை வகிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-4,44)



## எம்.பியாகிறார் ரணில் ஆவணம் சமர்ப்பிப்பு!

கொழும்பு, ஜூன் 17
ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக, அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை நியமிப்பதற்கான ஆவணம் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
கட்சியின் தீர்மானத்துக்கு அமைவாக, ரணில் விக்ரமசிங்கவை, தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிப்பதற்கான ஆவணம், தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். (ம-4)



## இலங்கையில் முதலீடு செய்ய இந்தியாவுக்கு அழைப்பு

கொழும்பு, ஜூன் 17
பகிரப்பட்ட செழுமையை அடைந்துகொள்வதற்காக இலங்கையுடன் இணைந்துகொள்ளுமாறு, இந்திய முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
கொழும்பில் உள்ள ஷங்கரிலா ஹோட்டலில் இருந்து டிஜிற்றல் முறையில் ஒளிபரப்பப்பட்ட, முதலீட்டு இலங்கை மன்றத்தின் இந்தியா சார்ந்த அமர்வில், இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய இந்த அழைப்பை விடுத்தார்.
இறப்பர், ஆடை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியவற்றில் கவனம் செலுத்தி, முதலீட்டாளர்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.
குறிப்பாக விட பொருளாகார வலயங்கள் மூலமாக, விட நிதிச் சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு முதலீட்டாளர்களை அவர் கேட்டுக் கொண்டார். (எ-4)

# கூட்டணிக்குள் முரண்பாடில்லை ஆனால் கருத்து வேறுபாடு உண்டு

## இராஜாங்க அமைச்சர் அருந்திக தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17
கூட்டணிக்குள் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. கருத்து வேறுபாடுகள் மாத்திரமே காணப்படுகின்றன என்று தென்னை, கித்துள், பனை மற்றும் இறப்பர் செய்கை மேம்பாடு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பொருளாதார ரீதியில் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ள வேளையில், எரிபொருள்கள் விலையை அதிகரித்துள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாது. எரிபொருள்கள் விலையேற்றத்தின் காரணமாக மீன்பிடி மற்றும் கைத்தொழிலாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே விலையேற்றம் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்.
எரிபொருள்களின் விலை அதிகரிப்புத் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம், தனிநபருடையதல்ல, ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்டவர்கள் இணைந்தே தீர்மானத்தை எடுத்தனர்
எரிபொருள்களின் விலை அதிகரிப்புத் தொடர்பில் அமைச்சரவையில் ஆழமாக ஆராயப்பட்டது. எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதாலேயே விலை அதிகரிக்கப்பட்டது.
எனினும் எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம்.
எரிபொருள் விலையேற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் வெளியிட்ட அறிக்கை குறித்து மாறுபட்ட பல கருத்துகள் குறிப்பிடப்படுகின்றன.
எரிபொருள் விலையேற்றத்தால் பாதிக்கப்படும் மக்களின் நிலையை அறிந்தே அவர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதனை அரசுக்கு எதிரான செயற்பாடு என்று கருத முடியாது. கருத்துச் சுதந்திரம் அனைத்துத் தரப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் மற்றும் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோரின் மாறுபட்ட கருத்துகள் அரசை ஒருபோதும் பலவீனப்படுத்தாது- என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்.குடாநாட்டில் டெங்கு நோய் பரவலில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளின் தாக்கம்


சின்னத்தம்பி நோபிள் சுரேந்திரன்,
கோகிலா சிவபாலகிருஷ்ணன்
விலங்கியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்

**யாழ் குடாநாட்டில் டெங்குத் தொற்று மற்றும் நுளம்பு நோய்க்காவிகளின் பரவல்**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இலங்கையில் டெங்கு நோய்த் தாக்கம் இருந்தபோதும், 1990 களில் டெங்கு வைரசின் நான்கு செரோடைப்கள் (DEN1 DEN4) இலங்கையில் கண்டறியப்பட்டதுடன் டெங்கு நோய்ப் பரவலும் அதிகரித்துள்ளது. யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை டெங்கு நோய்க்காவியான ஈடிஸ் நுளம்புகளின் பரவல் நீண்ட காலமாக பதிவாகியிருப்பினும், 2009 க்கு முன்னர் இங்கு டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. 2008 இல் 58 தொற்றாளர்கள் மட்டுமே பதிவாகியுள்ளனர், இதனால் டெங்கு வைரஸின் சுழற்சியும் குறைவாக காணப்பட்டது. வடக்கு கிழக்கில் மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற உள்நாட்டுப் போர், யாழ் குடாநாட்டுக்கும் ஆனையிறவூடான நாட்டின் ஏனைய பகுதிகளுக்குமான மக்களின் சுதந்திரமான் பயணத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

மே மாதம் 2009 இல் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து A9 பாதை திறக்கப்பட்டதும் யாழ் குடாநாட்டில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் படிப்படியான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.2009 மற்றும் 2010 இல் முறையே 422 மற்றும் 2648 நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் முன்பு எப்போதுமில்லாத வகையில் நான்கு செரோடைப்களின் புழக்கத்துடனான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையின் சடுதியான அதிகரிப்புக்கு யாழ் குடாநாட்டுக்கு உள்ளேயும் வெளியேயுமான சுதந்திரமான மக்கள் போக்குவரத்தே காரணமாக அமைந்தது. வேறு பல நாடுகளிலும் இவ்வாறான நிகழ்வுகள் பதிவாகியுள்ளன.

யாழ் குடாநாட்டில் டெங்கு நோய் பரவுதல் பருவகாலத்துடன் தொடர்புடையது. செப்ரெம்பர் மற்றும் பெப்ரவரி மாதங்களுக்கு இடையில் வரும் பருவ மழை காலத்தில் கூடியளவான நோய்த் தொற்று காணப்படும். மழை வீழ்ச்சி மற்றும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு இடையே ஒரு நேர்மறையான தொடர்பு இருப்பதுடன் முந்தைய மாதத்தின் மழைவீழ்ச்சிக்கும் நுளம்பு குடம்பிகளின் பெருக்கத்துக்கும் இடையே கணிசமாக தொடர்பு அவதானிக்கப்பட்டுள்ளது.




படம் 1: 2017 மே 2021 காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் பதிவாகியுள்ள டெங்கு தொற்றாளர்கள்

யாழ்.குடாநாட்டில் முறையே 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 8 ஆயிரத்து 261 மற்றும் 2 ஆயிரத்து 157 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் (படம்-1) அத்துடன் மே 2021 வரை 105 தொற்றாளர்கள் மட்டுமே இனங்காணப்படுள்ளனர்.

**கொரோனாத் தொற்று பரவலும் நாடு முடக்கமும்**

நாட்டில் முதலாவது கொவிட் 19 நோயாளி 2020 ஜனவரியில் இனங்காணப்பட்டதுடன் முதலாவது கொவிட் 19 தொற்றுக்குள்ளான இலங்கை பிரஜை 2020 மார்ச் மாத தொடக்கத்தில் அடையாளங் காணப்பட்டார். அதன் பின்னர் உறுதிப்படுத்தப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 2020 மார்ச் இறுதிக்குள் 122 ஆக உயர்ந்தது. யாழ். மாவட்டத்தில் முதலாவது கொவிட் 19 தொற்றாளர் 22 மார்ச் 2020 இல் இனங்காணப்பட்டார். இந்நிலையில் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன்




2020 மார்ச் 20 முதல் ஒரு மாதத்துக்கு மாவட்டங்களுக்கு இடையிலான பயணத்தடையுடன் கூடிய நாடளாவிய பொது முடக்கம் அமுல்ப்படுத்தப்பட்டது. பின்னர் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி மற்றும் புத்தளம் ஆகிய மக்கள் அடர்த்தியாக வாழ்கின்ற மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்ட்ங்களில் மே 11, 2020 முதல் பகுதியளவிலான அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் பாடசாலைகள் குறிப்பிட்ட சில தரங்களைத் தவிர ஏனையவற்றிற்கும், பல்கலைக்கழகங்கள் உட்பட அனைத்து கல்விசார் நிறுவனங்களும் தொடர்ந்து மூடப்பட்டிருந்தன. பொது முடக்கம் மற்றும் மாவட்டங்களுக்கு இடையேயான பயணக்கட்டுப்பாடுகள் 2020 ஜுன் மாத இறுதியில் இருந்து முற்றிலுமாக நீக்கப்பட்டு, மேற்கு மாகாணத்தைத் தவிர அனைத்து பாடசாலைகளும் 2021 ஜனவரி 11 முதல் கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டன.

2020 ஆம் ஆண்டில் முறையே 42 ஆயிரத்து 702 மற்றும் 122 கொவிட் 19 தொற்றாளர் தேசிய அளவிலும், யாழ் மாவட்டத்திலும் பதிவாகியுள்ளனர், அதேசமயம் இந்த எண்ணிக்கை 2021 ஏப்ரல் இறுதிக்குள் முறையே 63 ஆயிரத்து 782 மற்றும் ஆயிரத்து 304 ஆக உயர்ந்துள்ளது.

**யாழ் குடாநாட்டில் டெங்கு நோய் பரவுதலில் முடக்கம் மற்றும் பயணக்கட்டுப்பாடுளின் தாக்கம்**

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் உலக நாடுகள் முடக்கம் மற்றும் சமூக இடைவெளி பேணும் விதிமுறைகளை அமுலாக்குவதன் மூலம் பொதுமக்களின் நடமாட்டத்துக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தன. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்த சமயத்தில் பகுதியளவான மற்றும் நாடு தழுவிய முடக்கல் செயற்பாட்டை முன்னெடுத்தது. கொரோனாக் கொத்தணியின் உருவாக்கத்தின் அடிப்படையில் முடக்கலுக்கான நேரம் மற்றும் அமுல்படுத்தப்படும் பகுதியில் வேறுபாடு காணப்பட்டது.

> **அமுல்படுத்தப்பட்ட முடக்க அலையானது. மனித தொடர்பு விகிதங்கள். நோய் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பூகோளரீதியிலான இயற்கை பரிசோதனையில் டெங்கு வைரசின் பரவலை எவ்வாறு பாதிக்கிறன என்பதைக் காண ஒரு தனித்துவமான வாய்ப்பை அளித்துள்ளது.**

எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டது போல இவ்வாறான முடக்கங்கள் உலக நாடுகளின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளபோதிலும் சில நன்மைகளும் நிகழ்ந்துள்ளன.

இந்த முடக்கங்களின் இணை விளைவுகள், பல்வேறுபட்ட மனிதர்களுக்கிடையேயான தொடர்பு விகிதங்களை அதிகம் சார்ந்துள்ள தொற்று நோய்களின் பரவல் இயக்கவியலில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நாட்டுக்கு நாடு மாறுபடும் முடக்கங்களின் நேரம், காலம் மற்றும் தீவிரத்துடன் கூடிய 2020 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட முடக்க அலையானது, மனித தொடர்பு விகிதங்கள், நோய் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பூகோள ரீதியிலான இயற்கை பரிசோதனையில் டெங்கு வைரஸின் பரவலை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைக் காண ஒரு தனித்துவமான வாய்ப்பை அளித்துள்ளது. *(மிகுதி நாளை)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## பி.சி.ஆர்....

நிலைமை காணப்படுகின்றது. அத்துடன் குணமடைந்து வீடு செல்பவர்களின் வீதமும் சரிவடையத் தொடங்கியுள்ளது. இது ஆபத்தானபோக்கு என்பதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கையில் புத்தாண்டு கொத்தணிக்கு முன்னர், அடையாளம் காணப்படும் தொற்றாளர்களில் உயிரிழப்போரின் சதவீதம் 0.4 ஆக இருந்தது. புத்தாண்டுக் கொத்தணி ஆரம்பித்த காலத்தில் இது 0.6 சதவீதமாக இருந்தது. தற்போது நேற்றுமுன்தினம் இது ஒரு சதவீதமாக அதிகரித்துள்ளது. மேலும் புத்தாண்டுக் கொத்தணிக்கு முன்னர் வரையில் தொற்றுக் குணமடைந்து வீடு செல்வோரின் சதவீதம் 88 ஆகக் காணப்பட்டது. தற்போது 84 சதவீதமாக அது குறைவடைந்துள்ளது. இவை எல்லாம் ஆபத்தான போக்கையே காண்பிக்கின்றன- என்றார். (ஒ.5)

## கூட்டமைப்பு...

லாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்ற சூழலில் இந்தத் திடீர் சந்திப்ப ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன், தமிழ்க் கூட்டமைப்பு நேற்று சந்திப்பு நடத்த இருந்தது. இருப்பினும் அது இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில் கொழும்பில் தற்போது முகாமிட்டுள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ. தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ.5)

# அமைச்சர் கம்மன்பில பதவி விலகவேண்டும்

### நிலைப்பாட்டில் நானோ கட்சியோ மாறவில்லை என்கிறார் சாகர

கொழும்பு, ஜூன் 17

எரிபொருள் விலை உயர்வு மக்களின் நலன்களுக்கு எதிரானது. இதற்குக் காரணமான அமைச்சர் உதய கம்மன்பில பதவி விலக வேண்டும். இப்போதும் அதே நிலைப்பாட்டிலேயே, சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் நானும் உள்ளேன். இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பையடுத்து சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் செயலர் சாகர காரியவசம் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில், எரிபொருள் விலை உயர்வுக்கு காரணமான அமைச்சர் கம்மன்பில பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

இதற்கு பதிலளித்த கம்மன்பில, எரிபொருள் விலை அதிகரிப்பு ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பிரதமர் மஹிந்த ஆகியோரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பட்டது என்று குறிப்பிட்டிருந்தார்.

பிரதமர் மஹிந்த மற்றும் ஜனாதிபதி கோத்தாபய இருவரும் எரிபொருள் விலை அதிகரிப்பை நியாயப்படுத்தி அறிக்கையும் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த சாகர, நான் வெளியிட்ட அறிக்கையின் காரணமாக எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. அந்தக் கடிதத்தில் குறிப்பிட்ட விடயத்திலேயே நானும் எனது கட்சியும் உள்ளோம் -என்றார். (ஒ.5.இ)

# "ஆளுங்கட்சியினரும் மக்களும் என் பக்கம்"

### பிரேரணை குறித்து கம்மன்பில கருத்து

கொழும்பு, ஜூன் 17

"மக்களும், ஆளுங்கட்சியினரும் என் பக்கமே உள்ளனர். நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலுள்ள குறைகளை விரைவில் தெளிவுபடுத்துவேன்.

சாகர காரியவசத்தை நெருக்கடிக்குள் தள்ளும் நோக்கிலேயே குறித்த பிரேரணை முன்வைக்கப்பட்டிருக்கலாம்." என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் தனக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையொப்படும் வேளையிலேயே அதன் பிரதியொன்று எனக்கும் உறுப்பினர் ஒருவரால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. குறித்த பிரேரணையிலுள்ள குறைபாடுகள் மற்றும் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் ஏன் ஏற்புடையவை அல்ல என்பவற்றை விரைவில் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்துவேன்.

நாட்டு மக்களும், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட ஆளுங்கட்சி உறுப்பினர்களும் என்பக்கமே உள்ளனர் என்பதை சாகர காரியவசம் அறிக்கை வெளியிட்டதன் பின்னர் அறிந்துகொண்டேன். எனது பலமும் தெரியவந்தது. எனவே, சாகரவுக்கு நன்றி. சாகர காரியவசத்தை நெருக்கடிக்குள் தள்ளும் நோக்கில்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படலாம்." என்றார். (கு-44)

## வலயக்கல்வி அலுவலகம்
## - முல்லைத்தீவு -
## பெறுகைக்கான அழைப்பு தளபாடம், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்கள் வழங்கல் - 2021

மேற்படி தலைப்பின் கீழ் 2021.05.09, 2021.05.21 ஆம் திகதிகளில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பெறுகைக்கான அழைப்பில் குறிப்பிடப்பட்டிருந்த கீழ்வரும் காலவரையானது மாற்றியமைக்கப்படுகின்றது.

விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய. காலப்பகுதி 2021.05.10 - 2021.06.04 வரை என குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக 2021.06.22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இக்கேள்வி மூடுதல், திறத்தல் 2021.06.07 என குறிப்பிடப்பட்ட திகதியானது 2021.06.23 ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு என மாற்றி அமைக்கப்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றேன்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**முல்லைத்தீவு.**

## வலயக்கல்வி அலுவலகம்
## - முல்லைத்தீவு -
## பெறுகைக்கான அழைப்பு கட்டட திருத்த வேலைக்கான விலைமனு கோரல்

மேற்படி தலைப்பின் கீழ் 2021.05.09, 2021.05.21 ஆம் திகதிகளில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பெறுகைக்கான அழைப்பில் குறிப்பிடப்பட்டிருந்த கீழ்வரும் காலவரையானது மாற்றியமைக்கப்படுகின்றது.

விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய காலப்பகுதி 2021.05.10 - 2021.06.04 வரை என குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக 2021.06.22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இக்கேள்வி மூடுதல், திறத்தல் 2021.06.07 என குறிப்பிடப்பட்ட திகதியானது 2021.06.23 ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு என மாற்றியமைக்கப்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றேன்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**முல்லைத்தீவு.**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 05 . 01 . 1946



**மறைவு** 15 . 06 . 2021

## தங்கத்துரை சுபமங்களதேவி

யாழ். மூளாயைப் பிறப்பிடமாகவும், சங்கானை ஆஸ்பத்திரி வீதியை வதிவிடமாகவும், தற்போது லண்டன் Ilford ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தங்கத்துரை சுபமங்களதேவி அவர்கள் கடந்த (15.06.2021) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தசாமி வடிவாம்பாள் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தங்கத்துரை (விநாயகமூர்த்தி) அவர்களின் அன்பு மனைவியும், புலேந்திரன், சந்திரகுமார், பகீதரன், பத்மலோஜினி, தவக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், வளர்மதி, ஜெயரஞ்சனி, ஜீவரஞ்சனி, ஜெயக்குமார், குமுதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், நல்லநாயகி, காலஞ்சென்ற கதிரநாயகி, நல்லநாதன், சிறிகாந்தன், சந்தனவரதானந்தன், சிறீதராநந்தன், பூமகள், ரகுதேவி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சிவபாக்கியம், பரமேஸ்வரி மற்றும் பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், தேவகரன், யசிகரன், தனுகரன், வினுசிகா, தனோஜன், நிவேதிகா, நிருஷிகா, ரோசன், ருஷாந், சரன்யன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய தகவல் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**

புலேந்திரன் - மகன் Mobile : +447989712070
சந்திரன் - மகன் Mobile : +447805002873
பாஸ்கரன் - மகன் Mobile : +447475128782
தவக்குமார் - மகன் Mobile : +4917674536827
ஜெயக்குமார் - மருமகன் Mobile : +447947898903

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபான வகைகளை ஒன்லைனில் விற்கத் தடை

## அரசு நேற்றிரவு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

இணையம் (ஒன்லைன்) மூலமாக மதுபான வகைகளை விற்பனை செய்ய நிதி அமைச்சு வழங்கியிருந்த போதும், அதற்கு அனுமதி வழங்காதிருக்க அரசு தீர்மானித்துள்ளது.

சுகாதார மற்றும் இதர தரப்புகளின் கடும் எதிர்ப்பையடுத்தே இந்தத் தீர்மானத்துக்கு அரசு வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னர், இணையம் ஊடாக மதுபானம் விற்பனைசெய்வதற்கு நிதியமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என்று கலால் திணைக்கள ஊடக பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கொவிட் -19 பரவலைத் தடுக்கும் தேசிய செயல்பாட்டு மையத்திடம் முன்வைக்கப்பட்டது. குறித்த செயலணியும் அதற்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டது. இந்த நிலையில், அரசு மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளது. (து-இ)

# சமையல் எரிவாயு விலையில் குழப்பம்

## மீண்டும் இன்று பேச்சு

கொழும்பு, ஜூன் 17

சமையல் எரிவாயு விலை தொடர்பில், தீர்க்கமான முடிவெடுக்கப்படாத காரணத்தால், மற்றொரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் தலைமையில் வர்த்தக அமைச்சில் இன்று மாலை 6 மணிக்கு கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இரண்டு முக்கிய எரிவாயு நிறுவனங்களும் ஒரு எரிவாயு சிலிண்டரின் விலையை கிட்டத்தட்ட 700 ரூபாவுக்கு அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத் துள்ளன.

இருப்பினும், உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலையை 400 ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை பரிந்துரைத்துள்ளது. எரிவாயு நிறுவனங்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

அதனால் மீண்டும் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. சமையல் எரிவாயு விலை தொடர்பாக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவும் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளது. எரிவாயு விலை தொடர்பில் இன்று இறுதி முடிவு எட்டப்படும் என்றும் வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-4)

## தேவை

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு அனுபவமுள்ள ஆண் கணக்காளர் தேவை.

தொடர்பு:- 077 130 0190

## பெண் உதவியாளர் தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பல் வைத்தியசாலைக்கு பெண் உதவியாளர் உடன் தேவை. யாழ் மாநகர எல்லைக்குள் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு:- 021 222 9053

## விலைக்கேள்விக்கான கோரல்

## கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு- வடமாகாணம்

1. தலைவர், ஆளுனர் பெறுகைக்குழு சார்பாக மாகாண அமைச்சு, கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. குறித்த இக்குத்தகை அடிப்படையிலான வேலைத்திட்டமானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் அமைந்துள்ள பாடசாலைகளின் கூரை மீது சூரிய மின்சக்தி உற்பத்தி செயன்முறையின் போது அதற்கான நிதி பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி, உரிமை, அகற்றுதல் ஆகியவற்றிற்கான செலவீனங்களை உள்ளடங்கியுள்ளது இது தொடர்பான மேலதிக தகவல்கள் வடக்குமாகாணத்தின் ஏல ஆவணத்தின் Section 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த குத்தகை அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை இலங்கை மின் சார சபையின் திட்டம் 3இல் Netplus திட்டத்தின் ஊடாக மின்சார சபையுடன் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொள்வதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கான முழுக்கொடுப்பனவையும் இலங்கை மின்சார சபை ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் இல்ங்கை அரசாங்கத்தின் "Soorya Bala Sangramaya" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைக்கும் வருமானத்தின். ஒரு பகுதியை (வருவாய்பங்கு) குத்தகைகாரருக்கு வழங்கவேண்டும்
3. இக்குத்தகையின் காலம் 20 வருடமாக இருக்கும்.
4. இந்தக் காலத்திற்கான குறைந்தபட்ச எதிர்பார்க்கப்பட்ட மொத்த வருவாய் பங்கு 382.75 மில்லியன் ஆகும்.
5. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
6. விலைக் கேள்வியாளர்கள் **இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் சூரியகல சேவை வழங்குனர்களாக பதிவு செய்யப்பட்டிருப்பதுடன்** கறுப்புப் பட்டியலில் பெயர் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும்.
7. தகமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி -ஆவணத்தில் பகுதி 1 இல் மற்றும் பகுதி 5 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது..
8. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள்,கீழே **9ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரியில் மு.ப **9.00** மணியிலிருந்து பி.ப **4.00** மணிவரை - அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனைசெய்யலாம்.
9. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **மாகாணக் கல்வி அமைச்சு, வடக்குமாகாணம், செம்மணி வீதி, நல்லூர் (தொலைபேசி இல: 021-221 9259, தொலைநகல் 021-222-0794 எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்ட காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப3.00 மணிவரையில் சமர்ப்பித்து** கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
10. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியில் **மு.ப10.30** மணிக்கு அல்லது **அதற்கு முன்னர் செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந் தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும்.கேள்விதாரர்கள் வேலைக்கானகேள்விஅடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
11. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் **செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர் என்னும்** முகவரியில் மு.ப10.30 மணிக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியில் நடைபெறும்.
12. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| கேள்வி ஆவணம் வழங்கும்/பெற்றுக்கொள்ளும் காலம் | 16.06.2021 முதல் 27.07.2021 வரை |
| கேள்வி தொடர்பான முதற் கூட்டம் | 29.06.2021 அன்று மு.ப 10.30 |
| கேள்வி மூடுதல்/திறத்தல் | 28.07.2021 அன்று மு.ப 10.30 |

| கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | குறைந்தபட்சம் எதிர்பார்க்கப்பட்ட மொத்தவருவாய் (மில்லியன்) | வாடகைக் கான காலம் | மீளளிக்கப் படாத தொகை | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| Min.Edu/Lease/ Solar/ jaffna/ 2021-1 | யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சூரிய கலங்களினூடாக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு கூரைத்தளங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் | 382.75 | 20 வருடங்கள் | 20,000.00 | நான்கு மில்லியன் | 19.01.2022 வரை |
| Min.Edu/Lease/ Solar/Kilinochchi/ 2021-1 | கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சூரிய கலங்களினூடாக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு கூரைத்தளங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் | 382.75 | 20 வருடங்கள் | 20,000.00 | நான்கு மில்லியன் | 19.01.2022 வரை |
| Min.Edu/Lease/ Solar/Mannar/ 2021-1 | மன்னார் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சூரிய கலங்களினூடாக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு கூரைத்தளங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் | 382.75 | 20 வருடங்கள் | 20,000.00 | நான்கு மில்லியன் | 19.01.2022 வரை |
| Min.Edu/Lease/ Solar/Mullaitivu/ 2021-1 | முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சூரிய கலங்களினூடாக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு கூரைத்தளங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் | 382.75 | 20 வருடங்கள் | 20,000.00 | நான்கு மில்லியன் | 19.01.2022 வரை |
| Min.Edu/Lease/ Solar/Vavuniya/ 2021-1 | வவுனியா மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சூரிய கலங்களினூடாக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு கூரைத்தளங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் | 382.75 | 20 வருடங்கள் | 20,000.00 | நான்கு மில்லியன் | 19.01.2022 வரை |

பிரதம செயலாளர், வடமாகாணம்

தலைவர்

ஆளுனர் பெறுகைக்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பை....

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ராஜபக்ச அரசு புதிய அரசமைப்பை ஒருபோதும் கொண்டுவராது. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வையும் ஒருபோதும் வழங்கவும் மாட்டாது. இது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கும், அவர்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் தெரிந்த விடயம்.

ராஜபக்சக்களின் கடந்த ஆட்சியில் பேச்சு மேசைகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பல தடவைகள் அழைக்கப்பட்டு இறுதியில் ஏமாற்றப்பட்டனர்.

அதேபோல் இந்த ஆட்சியில் முதலாவது பேச்சைக்கூட நடத்தாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஏமாற்றியுள்ளார்.

முதலாவது பேச்சுக்கு முதல் நாள் காலை அழைப்பு விடுத்த ஜனாதிபதி செயலகம், அன்று மாலையே பேச்சை இரத்துச்செய்துள்ளது என ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. இன்று (நேற்று) பேச்சு இடம்பெறவிருந்தது. பேச்சு இரத்துச்செய்யப்பட்டமைக்கான காரணத்தை ஜனாதிபதி செயலகம் இன்னமும் அறிவிக்கவில்லை.

ஆனால், சர்வதேச அழுத்தத்தைச் சமாளிக்கவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பேச்சுக்கு ஜனாதிபதி அழைத்திருந்தார் என்பது உண்மை.

எனினும், இறுதியில் அந்தப் பேச்சை நடத்தாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஜனாதிபதி ஏமாற்றியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி மலர்ந்தால் தமிழர்களுக்கான தீர்வை நாம் வழங்கியே தீருவோம். கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தமிழ் மக்களுக்கு எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவார்- என்றார். (ஓ.5.22)

## கூட்டமைப்புடன்...

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி அழைக்கவில்லை. இரு தரப்பின் வேண்டுகோளின் பிரகாரம் புதிய அரசமைப்பு தொடர்பில் ஏற்கனவே நடத்தப்படவிருந்த பேச்சு, கொரோனாத் தொற்று நிலைமையால் பிற்போடப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இன்று (நேற்று) பேச்சு நடைபெறவிருந்தது. ஆனால், தவிர்க்க முடியாத காரணத்தால் பேச்சு மீண்டும் பிற்போடப்பட்டுள்ளது.

தெற்கில் எழுந்த எதிர்ப்பால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சை ஜனாதிபதி இரத்துச்செய்துள்ளார் என்று ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தியை அடியோடு மறுக்கின்றோம்.

தமிழ், முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி தலைமையிலான அரசு பேச்சு நடத்தத் தயாராகவுள்ளது.

நாட்டில் கொரோனா நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடன் தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான செயற்பாடுகளை அரசு முன்னெடுக்கும்- என்றார். (ஓ.5.22)

## பெற்றோல்...

விலை 96 ரூபாவாகக் காணப்படும். அதனுடன் போக்குவரத்து செலவுகளையும் சேர்த்தால் பெற்றோல் லீற்றர் ஒன்றின் இறுதிவிலை 108 ரூபாவாகும். ஆனால் அரசு 49 ரூபா இலாபம் வைத்து பெற்றோலை விற்பனை செய்கின்றது" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

எரிபொருள் விலையுயர்வு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டு மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இந்த நிலையில் எரிபொருள் விலையை அதிகரித்து அவர்களை அரசு மேலும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியிருக்கிறது. இது அரசியல் ரீதியில் அரசு இழைத்துள்ள மிகப் பெரும் தவறாகும். கொரோனாத் தொற்றால், மக்களின் வாழ்வாதாரம் முழுமையாகச் சரிந்துள்ளது. அன்றாட ஊதியம் பெறுவோர் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவற்றுக்கு மேலாக எரிபொருள் விலையையும் அதிகரித்து மக்கள்மீது பெருஞ்சுமையை சுமத்துவதற்கு அரசு ஏன் முயற்சிக்கின்றது? - என்றார். (த-இ)

## வடக்கு...

ஆளுநருக்கு விரைவில் கடிதம் அனுப்பப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாகாணத்துக்கு உட்பட்ட 9 மருத்துவமனைகளை மத்திய அரசு வசமாக்கும் தீர்மானத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்ட பொதுமருத்துவமனைகள் இதன் ஊடாக மத்திய அரசு வசமாகவுள்ளன.

இது தொடர்பில், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாணசபையின் அவைத் தலைவரான சி.வி.கே.சிவஞானத்திடம் கேட்டபோது,

எமது மாகாணசபை சுகாதார நியதிச் சட்டத்தை நிறைவேற்றியிருந்தது. அந்தச் சட்டத்தில் இந்த மருத்துவமனைகள் தெளிவாக எங்களுக்குரியன என்று சொல்லப்பட்டுள்ளது. எமது மாகாணத்துக்கு உட்பட்ட மருத்துவமனைகளை மத்தி தன் வசப்படுத்த முடியாது.

குறிப்பிட்ட மருத்துவமனைகளை மேம்படுத்தி அபிவிருத்திசெய்ய விரும்பினால் அதற்குரிய நிதியை மாகாணத்துக்கு மத்தி வழங்கட்டும். இந்த விடயங்களைக் குறிப்பிட்டு ஆளுநருக்கு விரைவில் கடிதம் அனுப்பவுள்ளேன்- என்றார். (ஓ.5)

## 2,419....

இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 30 ஆயிரத்து 675 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஆயிரத்து 667 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 94 ஆயிரத்து 145 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக மருத்துவமனைகளில் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்களில் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 34 ஆயிரத்து 215 ஆக அதிகரித்துள்ளது எனவும் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (த-22)

## யாழில்...

தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுப் பகல் 528 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 77 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்றுப்பகல் 143 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 19 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையில் 51 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 56 பேருக்கும், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 18 பேருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேருக்கும், கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 5 பேருக்கும், சங்கானை பிரதேச மருத்துவமனையில் 4 பேருக்கும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 13 பேருக்கும் என 122 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி**

கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 11 பேருக்கும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்கும் என 12 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**வவுனியா**

பெரியகாடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக்கும், வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், வவுனியா மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்கும் என 3 பேருக்குத்தொற்றுஉறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு**

ஒட்டுசுட்டான் மற்றும் முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தலா 2 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்கும் என 5 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**மன்னார்**

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் 5 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ.5)

## மாடியிலிருந்து...

இந்தச் சம்பவம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று இடம்பெற்றது. இதில், யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு பகுதியைச் சேர்ந்த நவரத்தினம் அன்ரன் ஜெயராஜா (வயது - 36) என்பவரே உயிரிழந்தார்.

முதலாம் மாடியிலிருந்து கீழே வீழ்ந்து மயங்கிய அவர் உடனடியாக கோப்பாய் பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், அதற்கு முன்னரே அவர் உயிரிழந்துவிட்டமை பரிசோதனையில் தெரியவந்தது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் இறப்பு விசாரணை மேற்கொண்டார். (த-26)

## குளிக்கச்....

கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொன்நகர் வடக்கு பகுதியைச் சேர்ந்த முத்துலிங்கம் அருமைநாதன் (வயது - 40) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். தனது ஒரு பிள்ளையுடன் குறித்த குளத்தில் நேற்றுமுன்தினம் அவர் குளிக்கச் சென்றிருந்தவேளை காணாமல்போயிருந்தார். அவரைத் தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், நேற்றுமாலை அவர் சடலமாக மீட்கப்பட்டார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-113)

## தனிமைப்படுத்தப்பட்டவர்....

நேற்று இடம்பெற்றது.

அந்த நபர் உட்பட அவருடைய குடும்பத்தினர் அண்மையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் மாலை வீட்டிலிருந்த அவர் காணாமல்போய்விட்டார். அவரை அவரது உறவினர்கள் தேடியுள்ளனர். இதன்போதே வீதியோர பொதுக்கிணறு ஒன்றில் அவர் சடலமாகக் காணப்பட்டார்.

வவுனியா கற்குழி பகுதியைச் சேர்ந்த கணேசன் இளங்குமரன் (வயது-51) என்பவரேசடலமாகமீட்கப்பட்டவராவார்.

தனிமைப்படுத்தலால், மன அழுத்தம் காரணமாக அவர் தவறான முடிவு எடுத்திருக்கலாம் என்று அயலவர்கள் சந்தேகம் வெளியிட்டனர்.

பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-110.18)

## இந்தோனேஷியாவில்...

தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10.13 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 6.1 ஆக பதிவானது. 10 கிலோமீற்றர் ஆழத்தில் உணரப்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

இதே பகுதியில் கடந்த ஜூன் 3ஆம் திகதி 60 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், நிலநடுக்க பாதிப்பால் மாலுகு தீவுகள் பகுதியில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கடற்கரைப் பகுதியில் வாழும் மக்கள் அங்கிருந்து வெளியேறி உயரமான பகுதிக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (த-இ)

## கண்டியில்...

நேற்றுப் பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அறிக்கை ஒன்றின் ஊடாக புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கத் தொழில் பணிமனை இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த நில அதிர்வு பசறை, லுனுகல பிரதேசங்களிலும் உணரப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதியாட்டம் நாளை

# இந்தியா - நியூசி. மோதல் கிண்ணம் வெல்வது யார்?

**வீடு வாடகைக்கு உண்டு**
யாழ் மாநகர சபைக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் உடைய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:-
076 434 4254, 077 143 5795



**சவுத்தாம்டன், ஜூன் 17**

**ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதியாட்டம் நாளை நடை பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதவுள்ளன. இரு அணிகளும் தற்போது சிறந்த போர்மில் உள்ளன. இதனால் எந்த அணி கிண்ணம் வெல்லும் என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது.**

இந்திய அணி உலகக்கிண்ணம், ரி20 உலகக்கிணம், மினி உலகக்கிண்ணம் என்று அத்தனை கிண்ணங்களையும் கைப்பற்றிய ஓர் அணி. ஆனால் நியூசிலாந்து அணியிடம் அவ்வாறு பெரிய கிண்ணங்கள் எவையும் இல்லை. இதனால் இந்த இறுதியாட்டத்தில் நியூசிலாந்து அணி கிண்ணத்தைக் கைப்பற்ற தன்னாலான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ளும். அதேபோல கிரிக்கெட் அரங்கில் எதிரிகள் இல்லாத (ஹேட்டர்ஸ்) அணி நியூசிலாந்து. இதனால் அந்த அணிக்குப் பல நாட்டு ரசிகர்களும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இந்திய அணியைப் பொறுத் வரையில், அந்த அணி கடந்த இரண்டு வருடங்களாக மிகச் சிறந்த முறையில் விளையாடி வருகின்றது. ஆஸ்திரேலியாவில் வைத்து ஆஸ்திரேலியாவை வீழ்த்தியது. அதன் பின்னர் இங்கிலாந்துக்கு எதிரான தொடரைக் கைப்பற்றியது. இவ்வாறாக பலமான அணிகளையெல்லாம் துடைத்தெறிந்தே இறுதிக்குள் இந்தியா சென்றுள்ளது. எனவே இந்திய அணி கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடிய வாய்ப்பு அதிகம் இருக்கின்றது என்பதும் அவதானிப்பு. ஆனால், ஆட்டம் நடைபெறும் சவுத்தாம்டன் ஆடுகளம் நியூசிலாந்து ஆடுகளங்களைப் போன்றது என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அத்துடன் இங்கிலாந்தில் வைத்து இங்கிலாந்தை வீழ்த்தி சிறந்த போர்மில் தன்னை நிலைநிறுத்தி யுள்ளது நியூசிலாந்து அணி.



**இந்திய அணி**

இந்திய அணியைப் பொறுத்தவரையில் அதன் 15 பேர் கொண்ட விவரம் கோலி (தலைவர்), ரகானே (துணைத்தலைவர்), அஸ்வின், பும்ரா, ஜடேயா, சமி, சிராஜ், பன்ட், புஜாரா, சகா, ரோகித், இசாந் சர்மா, சுப்மன் கில், ஹனுமா விகாரி உமேஸ் யாதவ்.

இதில் விளையாடும் 11 பேர் கொண்ட அணி துடுப்பாட்ட வரிசையின்படி ரோகித், சுப்மன் கில், புஜாரா, கோலி, ரகானே, விகாரி, பன்ட், ஜடேயா, அஸ்வின், இசாந்த சர்மா, பும்ரா என்றவாறு அமையலாம். சில வேளைகளில் விகாரி நீக்கப்பட்டு மேலதிக பந்துவீச்சுத் தெரிவாக சிராஜ் உள்வரலாம்.

**நியூசிலாந்து அணி**

நியூசிலாந்து அணியைப் பொறுத்த வரையில் அந்த அணியின் 15 பேர் கொண்ட விவரம், வில்லியம்சன் (தலைவர்), பன்ரெல், போல்ட், கோன்வே, கிரான்ட்கோம், ஹென்றி, ஜெமிசன், லாதம், நிக்கொல்ஸ், அஜாஸ் பட்டேல், சவுத்தி, றொஸ் ரெய்லர், வாக்நெர், வற்லிங், வில் யங் என்பதாக அமைந்துள்ளது. இதில் விளையாடும் 11 பேர் கொண்ட அணி துடுப்பாட்ட வரிசையின் படி - லாதம், கொன்வே, வில்லியம்சன், றொஸ் ரெய்லர், ஹென்றி நிக்கொல்ஸ், வற்லிங், கிரான்ட்கோம், அஜாஸ் பட்டேல், ஜெமிசன், சவுத்தி, போல்ட் என்பதாக அமையலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (ம)

# தனது தலையில் தானே மண்போட்டது ஜேர்மனி

## 'ஒன் கோல்' மூலம் பிரான்ஸ் வெற்றி



உரோம், ஜூன் 17

யூரோ கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் ஜேர்மனியை 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது பிரான்ஸ்.

ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் மட் ஹும்மல்ஸ் 'ஒன் கோலை' பதிவு செய்ய பிரான்ஸ் முன்னிலை பெற்றது. அதன் பின்னர் வேறெந்தக் கோல்களும் முதல் பாதியின் முடிவு வரை பதிவானவில்லை.

இரண்டாம் பாதியில் பிரான்ஸுக்கு இரு வாய்ப்புக்கள் கிடைத்தன. அத்துடன் தவறான பந்துக்கையாடல்கள் மூலமும் பிரான்ஸ் பின்னடைவைச் சந்தித்தது. ஆயினும் ஜேர்மனி பதிலடி கொடுக்காத வகையில் பிரான்ஸ் சமாளித்தது.

முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வெற்றிபெற்றது. (ம)

# றொனால்டோ சாதனை



உரோம், ஜூன் 17

யூரோ கிண்ண கால்பந்து தொடரில் நேற்றுமுன்தினம் நடந்த ஹங்கேரிக்கு எதிரான ஆட்டத்தில் இரண்டு கோல்களைப் பதிவுசெய்ததை அடுத்து பல்வேறுபட்ட சாதனைகளைப் படைத்துள்ளார் போர்த்துக்கல் அணித் தலைவர் றொனால்டோ.

இந்த இரண்டு கோல்களை அடுத்து யூரோ கிண்ணத் தொடரில் அதிக கோல்களைப் பதிவுசெய்த வீரர் என்ற சாதனை றொனால்டோவுக்குக் கிடைத்துள்ளது. இதுவரை அவர் 11 கோல்களைப் பதிவுசெய்துள்ளார். இதற்கு முன் பிரான்சின் மைக்கேல் பிளாட்டினி 9 கோல்களைப் பதிவு செய்ததே சாதனையாக இருந்தது. இந்தச் சாதனையை 2016ஆம் ஆண்டிலேயே றொனால்டோ சமன் செய்திருந்தார். நேற்று அவர் அந்தச் சாதனையைத் தகர்த்தார்.

அத்துடன் தொடர்ந்து 5 ஐரோப்பிய தொடர்களில் கோல் அடித்த முதல் வீரர் என்ற சாதனையையும் றொனால்டோ நிலைநாட்டினார். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 17. 06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org